# குன்றின் குரல்

ஆண்டு 12 ஜூலை-செப்டம்பர் 93 இதழ் 3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Centre for ... & Development
...RATNAM LANE,
...K. S. ROAD
VANNARPANNAI,
JAFFNA — SRI LANKA.

# குன்றின் குரல்

ஆண்டு 12
இதழ் 3
ஜூலை— செப்டம்பர் 93

ஆசிரியர்
அந்தனி ஜீவா

இணை ஆசிரியர்
ஜே.ஜேஸ்கொடி

ஆசிரியர் குழு
வண.மரிய அந்தனி
திருமதி. வசந்தி சிவசாமி
சு. முரளிதரன்

பொறுப்பாசிரியர்
செல்வி.க.மேனகா

வெளியீடு
தோட்டப்பிரதேசங்கட்கான
கூட்டுச் செயலகம்

அச்சுப்பதிவு
லங்கா பப்ளிசிங் ஹவுஸ்
கொழும்பு.

முகவரி
குன்றின் குரல்
30,புஸ்பதான மாவத்தை,
கண்டி

குன்றின் குரல்
தனிப்பிரதி ரூபா 10
ஆண்டு சந்தா ரூபா 40
சந்தா அனுப்பும் முகவரி

MANAGING EDITOR
C.S.P.A.
30,PUSPADANA MAWATHA,
KANDY.
PHONE :08.22955.

## மலையக பாரம்பரிய கலைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

இந்தியாவின் தென்கோடித்தமிழர்கள் பெருந்தோட்ட பயிர்செய்கைகளில் ஈடுபடுவதற்காக இங்கு கொண்டுவரப்பட்டார்கள். ஏராளமானோர் இலங்கையின் மத்திய மலைநாட்டில் குடியமர்த்தப்பட்டார்கள். இவர்களை மலையகமக்கள் என்றும் குறிஞ்சி நில மக்கள் என்றும் இனம் காட்டப்படுகிறார்கள்.

இந்திய வம்சாவளி தமிழர்கள் இங்கு புலம்பெயர்ந்து வந்த பொழுது தங்களின் பாரம்பரிய கலை வடிவங்களை தங்களோடு கொண்டுவந்தனர். தேயிலைக்கு முன்னர் கோப்பிகாலத்தில் கூட "கும்மியோ கும்மி கோப்பிக்காட்டு கும்மி" என்பது இவர்கள் வளர்த்த கலையாகும். இவர்கள் மத்தியில் வேர்கொண்டு தழைத்த கலைகள் கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், கரகக்கலை, காவடியாட்டம்,பொன்னர் சங்கர் கதை,அர்ச்சுனன் தபசு, காமன் கூத்து, தப்பு இசை, சிலம்புக்கலை போன்ற பலவாகும்.

மலையக மக்களின் பாரம்பரியக்கலைகளில் மிகமுக்கியமானது தப்பு. இந்த தப்பு கருவியை பதினெட்டுவகையாக அடிக்கலாம்.

இதேபோன்று காவடியாட்டம் , கரகாட்டம், திருவிழா உற்சவங்களுக்கு தப்பு கருவியை பயன்படுத்துவார்கள். மற்றும் காமன் கூத்து ,அர்ச்சுனன் தபசு, பொன்னர் - சங்கர் கதை ஆகியவற்றுக்கு தப்புகருவியை பயன்படுத்துவர். இன்னொரு முக்கியமான இசைக்கருவி உடுக்கு.. காவடியாட்டம் , கரகாட்டம் , பேயாட்டம் போன்றவற்றிற்கு உடுக்கே நாயகனாகும்.

இதுபோன்ற பாரம்பரிய கலைகளான உறுமி மேளம், தமூர், செஞ்சனக்கட்டை, சங்கு , தண்டை போன்ற கருவிகள் உபயோகிக்கப்படும். இன்றும்கூட நம்மிடையே கும்மி, கோலாட்டம், காவடி என்பவை தோட்ட மக்களின் வாழ்வோடு இரண்டற கலந்துவிட்ட பாரம்பரிய கலைகளாகும்.

மலையக பாரம்பரிய கலைகளில் என்றும் எம்முடன் நின்று நிலவிவருவது மலையக வாய்மொழிப்பாடலாகும். இந்த வாய்மொழிப்பாடல்கள் மூலமே இந்த மக்களின் வரலாற்றை அறிந்து கொள்ளமுடியும். இந்த மக்களின் வரலாற்றில் பல நெளிவுசுழிவுகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றதை கண்டுகொள்ளலாம்.

இத்தகைய வாய்மொழிப் பாடல்களை அழிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். இன்று நம்மிடையே நவீன வசதிகள் உண்டு. அதனால் " வீடியோ" மூலம் "ஓடியோ" மூலம் பாரம்பரியகலைகள் பதிவுசெய்து பாதுகாக்கப்பட வேண்டும்.

எமது சமூகத்துக்கு இருக்கின்ற அடையாளமான பாரம்பரிய கலைவடிவங்களை நவீன சாதனங்கள் மூலம் பாதுகாப்பது தலையாய கடமையாகும்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நிமிடம்

பொறுப்பாசிரியர்

# ஒரே பார்வை

ஒரு நிமிடம் ஒரே பார்வை உங்கள் விழிகளில் பதிவுறுகையில் திடீரென்று நின்றுவிட்டது. இது எவ்வாறு மீண்டும் தோன்றியதென ஓர் சலனம் ஏற்படலாம். குன்றின் குரலில் பொறுப்பாசிரியராக இருந்த பெ. முத்துலிங்கம் அவர்களே இப்பகுதியை உங்களுக்கு அறிமுகப் படுத்தினார். தோட்டப் பிரிதேசங்கட்கான கூட்டுச் செயலகத்தின் செயலாளராக பதவி வகித்த பெ.முத்துலிங்கம் அவர்கள் தனது பதவியின் அடிப்படையில் இப்பொறுப்பினை வகித்ததுடன் தனிப்பட்ட காரணங்களின் நிமித்தம் பதவியை இராஜினாமா செய்ததன் காரணமாக செயலக பணிமனை உதவிச் செயலாளராக கடமையாற்றிய நான் அப்பொறுப்பினை ஏற்றேன். எனினும் பல்வேறு வேலைப் பளுவின் காரணமாக இப்பகுதியினை கடந்த ஒரு சில இதழ்களில் என்னால் தொடர முடியாமற் போய்விட்டது. மேலும் இப்பகுதி வாசகர் மத்தியில் ஓர் உந்துதலை ஏற்படுத்தி வந்தமை குறிப்பிடதக்கது. எனவே அப்பகுதியினை அதே பாணியில் தொடரும் முயற்சியினை இவ்விதழிலிருந்து மேற்கொண்டுள்ளமையை வாசகர்களுக்கு அறியத் தருகின்றேன்.

இவ்விதழ் வழமைப்போல் மலையகம் தொடர்பாக பல ஆய்வுக்கட்டுரைகளையும் வரலாற்றுடன் ஒன்றிய சிறுகதைகளையும் தாங்கி வருகின்றது மலையகத்தின் கல்வி நிலையை பற்றி அதிகளவு அக்கறை செலுத்திவரும் "குன்றின் குரல்" இம்முறையும் மலையகக் கல்வி நிலை தொடர்பாக ஆழ்ந்த அறிவினை கொண்டுள்ள பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் கட்டுரையைத் தாங்கி வருகிறது. மலையகச் சமூகத்தினால் ஏன் உயர் கல்வியை பெற முடியாமல் இருக்கின்றது? மற்றும் இன்று ஏன் மற்றைய சமூகத்தைச் சார்ந்த மாணவர்களுடன் போட்டி போட முடியாமல் உள்ளது என்பதனைப் பற்றி ஆதார பூர்வமாக தமதாய்வில் கட்டுரையாளர் நிரூபித்துள்ளார். இன்றைய மலையக இளம் சந்ததியினருக்கு தம் யதார்த்தத்தை புரிந்துகொள்ள இக்கட்டுரை வாய்ப்பளிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இக்கட்டுரையுடன் மலையக மக்கள் மத்தியில் மங்காது நிலைத்து நிற்கும் கலையான காமன்கூத்தினைப் பற்றிய ஆய்வுக்கட்டுரையையும் இவ்விதழ் உள்ளடக்கியுள்ளது. மலையகக் கலைகளைப் பற்றிய நூல் ஒன்றினை வெளியிட்டுள்ள மாத்தளை வடிவேலன் இக்கட்டுரையை எழுதியுள்ளார். இக்கட்டுரையில் ஓர் சர்ச்சையையும் கிளப்பியுள்ளார். அதாவது காமன் கூத்து ஒரு கலைக்கூத்தா? அல்லது மலையக மக்களால் பக்தி சிரத்தையோடும் நெறிமுறைகளோடும் மேற்கொள்ளப்படும் ஒரு சமய சடங்கா? எனும் கேள்வியை எழுப்பி இது பக்தி சிரத்தையோடு மேற்கொள்ளப்படும் சடங்கு என்பதனை தமது கட்டுரையில் விளங்கியுள்ளமை சிறப்பம்சமாகும். இவ்விரு ஆய்வுக் கட்டுரைகளுடன் ஓர் வரலாற்றுத் தகவலை உள்ளடக்கிய சிறுகதையொன்றும் இவ்விதழில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மலையகத்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவரான மல்லிகை சி.குமார் மலையக மண்ணுக்காக எழுபதுகளில் உயிர்த்தியாகம் செய்த சிவனு லட்சுமணனுக்கு ஓர் நினைவு தூபி எழுப்பாதா என இம்மலையக தலைமையை உணர்வு பூர்வமாக சாடுவதுடன், அச்சிவனுவிற்காக அவனது வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் உள்ளார்ந்த ரீதியால் நன்றியை செலுத்தியவண்ணம் இருப்பதை "மண்ணோடு கலந்தவன்" எனும் தம் சிறுகதை மூலம் மிக ஆழமாக எடுத்துக்காட்டியுள்ளார். இதனை வாசிக்கையில் நீங்களும் உங்கள் நன்றியினை செலுத்திவிடுவீர்கள் என்பது திண்ணம்.

தற்போது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் முதனிலை பெற்றுவரும் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய கட்டுரையும் இவற்றுடன் இணைந்து வெளிவந்துள்ளது. மலையகநாட்டாரியல் தொடர்பாக ச. மணிசேகரன் எழுதிய கட்டுரையும் வாசகர்களை கவரும் என்பதில் ஐயமில்லையென்பதுடன் பண்ணாமத்துக்கவிராயர் மொழிப் பெயர்த்து வழங்கியுள்ள 'பிரதமருக்கு ஒரு கடிதம்" எனும் சுயானா நாட்டு சிறுகதை வாசகர்களையும் எழுத்தாளர்களையும் மிகவும் கவரும் என்பதுடன் இப்புதிய சிறுகதை முறையை எமது எழுத்தாளர்களும் பின்பற்ற இம்மொழிபெயர்ப்பு உதவியாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவற்றுடன் மலையக பத்திரிகை முன்னோடிகளில் ஒருவரான பொ.கிருஷ்ணசாமி அவர்களைப் பற்றி அறிமுகக்கட்டுரையும் மலையக மக்களின் சமயநம்பிக்கைகளும் சடங்குமுறைகளும் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட விமர்சன கட்டுரையும் பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் "குன்றின் குரல்" ஆசிரிய குழுவால் நடாத்தப்பட்ட எழுத்துப் பயிற்சி பட்டறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட "நெருப்புக்குள் வீடுகட்டி" என்ற தலைப்பில் கதையும் கட்டுரையும் இவ்விதழில் வெளி வந்துள்ளன. எனவே "குன்றின் குரல்" வாசகர்களுக்கு இவ்விதழ் ஓர் சிறப்பிதழாக அமையும் என எதிர்ப்பார்க்கின்றோம்.

இறுதியாக 'குன்றின் குரல்" ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்த அ.இராமன் அவர்கள் வேலைப்பளுக் காரணமாக தாம் பிரதிநிதித்துவம்படுத்திய அமைப்பி லிருந்து விலகிக்கொண்டுள்ளமையினால் ஆசிரியர் குழுவிலிருந்தும் விலகிக் கொண்டுள்ளமையை தங்களுக்கு அறியத்தருவதோடு அவ்வெற்றிடத்தை சு.முரளிதரன் அவர்கள் நிறைவு செய்துள்ளமையும் வாசக பெரு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டில் உயர்கல்வி தொடர்பாக உருவாக்கப்பட்ட கொள்கைகள் மலையக மக்கள் போன்ற சிறுபான்மை பிரிவினருக்கு பாதகமாகவே அமைந்தது.

# மலையக சமூகமும் உயர்கல்வியும்

Centre for women & Development
CWD
07. RATNAM LANE,
Off K. K. S. ROAD
VANNARPANNAI,
JAFFNA — SRI LANKA.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
தலைவர் சமூகவிஞ்ஞானம்,கல்வித்துறை
கல்வியியல்பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்.

உலகளாவிய ரீதியில் பல்வேறு சமுதாயங்களும் தமது சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டை அடைவதற்கு குறிப்பாக உயர்கல்வி ஒரு சக்தி மிக்க கருவியாக இருந்து வந்துள்ளது. சமூகவியலாளர் இவ்வாறான மேம்பாட்டினை முன்னேற்றத்தினை 'சமூக நகர்வு' என்றும், அவ்வாறான சமூக நகர்வுக்கு நவீன உலகில் கல்வியே முக்கிய காரணியாக விளங்கி வந்துள்ளது என்பதை தமது ஆய்வுகளில் இருந்து கண்டறிந்துள்ளனர். அத்துடன் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா 1950களில் அடைந்த பொருளாதார அபிவிருத்திக்கு அந் நாட்டின் கல்விவளர்ச்சி ஒரு முக்கிய காரணி என்று ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வளர்முக நாடுகளின் சமூகங்களும் கல்வித்துறையில் அதிக அக்கறை செலுத்தத் தொடங்கின.

**சுதந்திர இலங்கையில் சுரண்டப்பட்ட மக்கள்**

பல இன சமுதாயங்கள் வாழுகின்ற நாடுகளில் பொதுவாக கல்வியில் பின்தங்கிய பல்வேறு பிரிவினர்கள் பலர் இனங்காணப்பட்டுள்ளார்கள். சேரிவாழ் மக்கள், கிராமப்புறமக்கள், குறைந்த வருமானப் பிரிவினர், பெண்கள், உளக்குறைபாடு உடையோர் ஆகியோருடன் இனச் சிறுபான்மை யினரும் அப்பிரிவினருள் அடங்குவர். யுனஸ்கோவின் அண்மைக்கால ஆய்வுகளின் படி ஆசிய பிராந்தியத்தில் கல்வியில் பின்தங்கிய பிரிவினருள் இனச்சிறுபான்மையினரும் முக்கியத்துவம் பெறுகின்றனர். ஆய்வுகளின் படி இலங்கையில் வாழுகின்ற தோட்டத் தொழிலாளர்கள் அல்லது இந்திய மரபுவழித் தமிழர் இலங்கையில் காலங்காலமாக கல்வித்துறையில் பின்தங்கியவர்களாக இனங்காணப் பட்டுள்ளது. அவ்வாய்வின்படி ஆசிரியர் மாணவர் விதம் 64:1 தேசிய விகிதம் 21:1 பிள்ளைகளில் 9 விதமானவர்களே ஆரம்பக்கல்வியில் இருந்து இடை நிலைக்கல்விக்கு சென்றனர். பெருந் தோட்டப் பெண்களில் 52 விதமானோரே எழுத்தறிவுடையோர். வாழ்க்கை நிலைமைகள் நிச்சயமற்றதாகவும் பிரதி கூலமானதாகவும் காணப்பட்டதன் காரணமாக சுதந்திர இலங்கையில் பெருந்தோட்ட மக்களே மிகக் கூடியளவிற்கு சுரண்டப்பட்ட ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினராக இருந்தனர் என்று இந்த ஆய்வு எடுத்து கூறுகின்றது.

இன்றைய உயர்கல்வி குறிப்பாக பல்கலைக்கழக கல்வி பாடசாலைக் கல்வியின் ஒரு தொடர்ச்சியாகும். பாடசாலைக் கல்வியின் பாட ஏற்பாடு பயிற்சி முறைகள், பரீட்சை முறைகள் என்பன யாவும் மாணவர்களை ஒரு நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு வகுப்பேற்றம் செய்வதாகவே அமைகின் றது. எனது நோக்கில் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறுகின்ற 6500 (இனிமேல் 9000) பேரில் உயர்கல்விக்காக இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு தவறாமல் கல்விப்பயிற்சி வழங்கப் படுகிறது. உயர்கல்வியில் அனுமதி பெறுவதற்கென்று மாணவர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டாலும் அவர்கள் அனைவரும் அனுமதி பெறுவதில்லை. க.பொ.த. உயர்நிலை பரீட்சைக்கு அமரும் 150,000 பேரில் 6500 பேருக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது. 25,000 பேர் அனுமதி பெறத் தகுதியுள்ளவர்கள் என்று கூறப்பட்டு அவர்களுக்கு இடவசதி இல்லையென்று அனுமதி மறுக்கப்படுகின்றது. இன்று நிலவும் இவ்வாறான நிலை உயர்கல்வி அனுமதியில் நிலவும் கடுமையான போட்டியை சுட்டிக்காட்டுகின்றது.

**தோட்டப்பாடசாலை பிள்ளைகளுக்கு வாய்ப்பு இல்லை.**

இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி ஐம்பது ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. பல்கலைக்கழகக் கல்வி தொடங்கப்பட்ட காலத்தில் மலைய கத்தில் சிறந்த இடைநிலைக்கல்வி நிலையங்கள் உருவாகவில்லை. வசதி குறைந்த தோட்டப்பாடசாலைகளில் பயின்ற பிள்ளைகளுக்கு இடைநிலைக் கல்வியில் அனுமதி பெற போதுமான அளவு வாய்ப்புகள் இல்லை. ஏறக்குறைய நான்கு தசாப்பதங்களாக இந்நிலை யிலேயே இப்பாடசாலைகள் இயங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தன. இதே காலப்பகுதியில் இலங்கையில் பல இதர மாவட்டங்கள் பாடசாலைக் கல்வியில் நன்கு முன்னேறிக் கொண்டன. இப்பாடசாலைகள் "உயர்கல்விக்கு ஆயத்தம் செய்யும் ஒரு பாரம்பரியத்தை வளர்த்துக்கொண்டு விட்டன." ஆனால், மலையகப் பாடசாலைகள் தொடர்ந்து பின்தங்கிய நிலையிலேயே இருந்தன. 1970ம் ஆண்டுவரை நாட்டில் உள்ள இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே பல்கலைக்கழகங்களில் பெரும்பான்மையினராக அனுமதி பெற்றனர். மலையக மாவட்டங்கள் பொதுவாக உயர் கல்வியில் பின்தங்கியே இருந்துவிட்டது. அங்கு சிறுபான்மையினராக வாழ்ந்த மலையக தமிழ்மக்கள் மிகக் கூடியளவிற்கு பாடசாலைக்கல்வியில் பின்தங்க நேர்ந்தமைக்கு பொருத்தமுடையதான காரணங்களில் உயர்கல்வியைத் தொடரக் கூடிய பாடசாலைகளின் எண்ணிக்கையும் ஒரு காரணமாக அமைந்திருந்தன. மத்திய மாகாணத்தில் மொத்தமாக 302 பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புகள் உள்ளன. இவற்றில் 85.8 விதமானவை (258) சிங்களமொழிப் பாடசாலைகளாகவும், 14.2 விதமானவை (44) தமிழ்மொழி மூலமான பாடசாலைகளாகவும், உள்ளன. இவற்றில் 19 பாடசாலைகள் மட்டுமே உயர்தர வகுப்புகள் உள்ளவை. ஏறக்குறைய 6 வீதமானவையே, இம்மாகாணத்தில் இரண்டாவது பெரும்பான்மை மக்களாக வாழும் (15.3 வீதம்-1,503,020 பேர்) தமிழர்களுக்கென உள்ளன. இவற்றிலிருந்து மத்திய மாகாணத்தில் வாழும் இந்திய மரபுத் தமிழர்களுக்கான உயர்கல்விக்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே உள்ளது என்பது தெளிவாகிறது. இத்தகைய சூழ்நிலையில் அவர்களால் பொதுவாக கல்வி வளர்ச்சிக்கு அவசியமான ஒரு கல்விப் பாரம்பரியத்தை வளர்த்துக் கொள்ள முடியாது போய்விட்டது. பல்கலைக்கழக அனுமதியில் கடுமையான போட்டி தோன்றியவிடத்து மலையக மாணவர்கள் இயல்பாகவே பின்தங்கி விட நேரிட்டது. இப்போட்டி நிலைமை நாடாளவிய ரீதியில் சகல இனத்தவரையும் பாதித்தபோதிலும் மலையக மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டனர். சுருக்கமாக கூறின் காலங்காலமாக பாடசாலைக் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருந்தமையும் பல்கலைகழக வாய்ப்புகள், விரிவுபடுத்தப்படாமல் கூடியளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டமையும் மலையக மக்களின் - இளைஞர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை பெரிதும் பாதித்தது. இன்று மலையக மக்கள் உயர்கல்வியில் பின்தங்கி இருப்பதை இதிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

மேலும் இந்நாட்டில் உயர்கல்வி தொடர்பாக உருவாக்கப்பட்ட கொள்கைகள் மலையக மக்கள் போன்ற சிறுபான்மை பிரிவினருக்கு பாதகமாகவே அமைந்தன. உயர்கல்வியின் மீதான கட்டுப்பாடுகள் இதற்கு ஒரு உதாரணமாகும். அத்துடன் 1970ஆம் ஆண்டின் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட அனுமதிக் கொள்கைகள் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக இடங்களை விரிவுபடுத்தாது அவற்றை மறுபங்கீடு செய்யும் ஒரு முயற்சியாகவே அமைந்தது. இவ்வனுமதிக் கொள்கை மாற்றங்கள் பல்வேறு உருவங்களில் இன்றும் தொடர்ந்து இருந்துவருகின்றன. பின்தங்கிய மாவட்டங்களுக்கு சில அனுமதி சலுகைகள் வழங்கப்பட்டன; மலையக மக்கள் கல்வியில் மாவட்டங்களின் முழுமையான கல்விநிலை கருத்தில் கொள்ளப்பட்டதேயன்றி மாவட்டங்களுக்குள்ளே காணப்படுகின்ற சமமின்மை, கல்வியில் பின்தங்கிய மக்களின் நிலைமை என்பன கருத்தில் கொள்ளப்படவில்லை. இந்நிலையில் மலையக மக்கள், அனுமதி கொள்கை மாற்றங்களால் நன்மை பெற முடியவில்லை.

## போட்டியிட்டு வெற்றி பெற முடியாத நிலை

மலையக மக்கள் மிக தாமதித்தே உயர் இடை நிலைக்கல்வியில் (ஆண்டு 12,13) பங்கு கொண்டனர். மலையக பகுதிகளில் 1960களிலேயே உயர்நிலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. ஆரம்பத்தில் கலை வகுப்புகளும், அதன் பின்னர் தாமதித்து விஞ்ஞான வகுப்புகளும் தொடங்கப்பட்டன. உயர் இடைநிலை கல்வியில் பங்கு கொள்வோர், கல்வியில் முன்னேறிய பிரிவினருடன் போட்டியிட்டு வெற்றி பெற முடியாத நிலையை இலகுவில் விளங்கி கொள்ளலாம். குறிப்பாக விஞ்ஞான பயிற்சி நெறிகளில் (மருத்துவம், பொறியியல்) மலையகப் பாடசாலைகளில் வினைத்திறன் குறைந்து காணப்படுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

தென்னாசிய பிராந்தியத்தில் கடந்த 6 தசாப்பதங்களாக இலங்கையிலேயே பாடசாலைக் கல்வியை சனநாயகப் படுத்தும் பல முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எடுத்துக் காட்டாக டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் மத்திய பாடசாலைகளும் இலவச கல்விமுறையும் அறிமுகம் செய்யப்பட்டன.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் மத்திய மகா வித்தியலயங்கள் அமைக்கப்பட்டன. பாடசாலைப் புலமைப்பரிசில்கள் ஏற்படுத்தப்பட்டன. உதவிபெறும் பாடசாலைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டன. இச்சீர் திருத்தங்கள் யாவும் இலங்கைவாழ் ஏனைய பிரிவினரின் கல்வி முன்னேற்றத்திற்கு பெரும் தொண்டாற்றின. ஆங்கில கல்விக்கு பதிலாக தாய்மொழிக்கல்வி உயர்கல்வி வரை அறிமுகம் செய்யப்பட்டமையும் ஒரு முக்கிய கல்வி சீர்திருத்தமாகும். ஆயினும் இவையாவும் மலையக தமிழரின் கல்விவளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யவில்லை. எடுத்துக்காட்டாக மலையக பிள்ளைகள் தோட்டப் பாடசாலைகளில் ஏற்கனவே இலவசமாகவே கல்வி பெற்றுவந்துள்ளனர். அத்துடன் அவர்கள் தமது தாய்மொழியிலேயே ஆரம்பக்கல்வியையும் பெற்று வந்தனர். இதனால் இவ்விரு துறை சார்ந்த கல்வி சீர் திருத்தங்கள் பெருந்தோட்ட பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியோடு தொடர்பற்று இருந்தன. தேர்தல் தொகுதிகள் தோறும் அமைக்கப்பட்ட (டொனமூர் காலத்தில் 50 தேர்தல் தொகுதிகள்) மத்திய பாடசாலைகள் மலையக பிள்ளைகளுக்கு இடை நிலைக்கல்வியை வழங்கவில்லை.

## சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் ஒரே நிலை

19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கிறிஸ்தவ ஆங்கில பாடசாலைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான உள்ளூர் சமய இயக்கங்கள் ஆங்கில பாடசாலைகளை நிறுவின. இவை, வடபகுதியிலும், தென்பகுதியிலும் பௌத்த இந்து பிள்ளைகளுக்கு ஆங்கில மொழியிலான இடைநிலைக் கல்வி வாய்ப்புகளை வழங்கின. வடபகுதியில் ஆறுமுகநாவலரும் தென்னிலங்கையில் பௌத்த பிரமஞான இயக்கமும் குறிப்பாக அநகாரிக தர்மபாலாவும் இக்கல்விப்பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். ஆயினும், மலையகத்தில் ஆங்கில இடைநிலைப் பாடசாலைகள் அமைக்கும் அளவுக்கு இயக்கங்கள் தோன்றவில்லை.

டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறையில் இருந்த காலத்திலும் சுதந்திரத்தின் பின்னரும் இலங்கை கல்விமுறையின் குறைபாடுகளை ஆராய பல அரசாங்க குழுக்களும் ஆணைக்குழுக்களும் நியமிக்கப்பட்டன. இவையாவும் பல்வேறு நுணுக்கமான ஆய்வுகளையும், விதந்துரைகளையும் தெரிவித்தன. ஆயினும், மலையக தமிழ் மக்களின் பின்தங்கிய கல்விநிலையை பொறுத்தவரையில் இந்த ஆணைக்குழுக்கள் திட்டவட்டமாக எதுவித கருத்துரையையோ அல்லது விதந்துரைகளையோ செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனது நோக்கில் 1901 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டறிக்கையில் தோட்டத் தொழிலாளர்களின் பின்தங்கிய கல்வி நிலை பற்றி திட்டவட்டமாக எடுத்துக்கூறப்பட்டது. அதன் பின்னர் அண்மைக்கால இளைஞர் அமைதியின்மை பற்றிய சனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் சில உடன்பாடான கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. ஆயினும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் கல்விமுறை பற்றி வெளியிடப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகள், அரசாங்க வெள்ளை அறிக்கைகள், என்பன வெளியிட்ட பெருந்தோட்ட மக்களின் கல்வி பற்றிய கருத்துகள் பெருமளவிற்கு எதிர் மறையாகவே அமைந்தன. எடுத்துகாட்டாக மலையக தமிழ் பிள்ளைகளின் கல்வி மொழி சிங்களமாக அமைதல் வேண்டுமென்றும் (தேசிய கல்வி ஆணைக்குழு 1960) அவர்களின் கல்விமொழி அரசகரும மொழியாக அமைதல் வேண்டுமென்றும் (தேசிய கல்வி முறைக்கான அரசாங்க ஆலோசனைகள் 1964) விதந்துரைகள் வெளியிடப்பட்டன. இவ்வறிக்கைகள் மலையக தமிழ் மாணவர்களின் போதனா மொழியை மாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனவேயன்றி அவர்களுடைய கல்வி வசதியை மேம்படுத்தும் விதந்துரைகளை செய்யவில்லை. சுருங்கக்கூறின் கல்வி வசதிகளை பொறுத்தவரையில் மலையக மக்கள் சுதந்திரத்தின் முன்னரும் பின்னரும் ஒரேவகையான முறையிலேயே கருத்தில் கொள்ளப்பட்டனர். பிரித்தானிய குடியேற்ற ஆட்சியாளர் எவ்வாறான கொள்கையை கடைபிடித்தனரோ அவ்வாறான கொள்கையே சுதந்திரத்தின் பின்னரும் கடைப்பிடிக்கப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்தமையால் நாட்டின் பிறமக்கட் பிரிவினர் அடைந்த உடனடியான நன்மைகளும், வாய்ப்புகளும் மலையக மக்களுக்கு கிட்டவில்லை.

## பெரும்பான்மையினருக்கே பெருமளவிற்கு உயர்கல்வி வாய்ப்பு

பல்கலைக்கழக கல்வியைப் பொறுத்தவரையில் இன்று அனைத்து பல்கலைக்கழகங்களும் தேசிய பல்கலைக்கழகங்களாக கருதப்படுகின்றன. ஆயினும் நடைமுறையில் தென்னிலங்கை, வடஇலங்கை, கிழக்கிலங்கை ஆகிய பகுதிகளில் இயங்குகின்ற பல்கலைக் கழகங்களில் ஒரு பிராந்திய தன்மையை காணமுடிகின்றது. அத்துடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர, களனி பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழி மூலம் பயிற்சி நெறிகள் இல்லை. இவ்வகையில் நோக்குமிடத்து இந்திய மரபு வழித்தமிழர், இஸ்லாமியர் போன்ற முக்கிய சிறுபான்மை பிரிவினருக்கு என்று பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப் படவில்லை. வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய சகல பல்கலைக்கழகங்களும் பெரும்பான்மையினருக்கே பெருமளவுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன. மத்திய மலைநாட்டிலே மலையக தமிழர்கள் மத்தியில் பேராதனை பல்கலைக்கழகம் அமைந்திருந்த போதிலும் அவர்களுக்கு அங்கு விசேடமான உயர்கல்வி வாய்ப்புகள் இல்லை. இங்குள்ள பல்வேறு நிலைமைகளின் காரணமாக மலையக மாணவர்கள் யாழ்ப்பல்கலைக்கழகம், கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் என்பவற்றிற்கு அனுமதி பெற்றாலும் சென்று பயிலும் நிலை இல்லை. அனுமதி பெறும் ஒரு சிலரும் தமது உயர்கல்வியை கைவிடும் நிலையே காணப்படுகிறது. அத்துடன் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவோரும்கூட பொருளாதார நிலைமை காரணமாக உயர்கல்வியை இடைநிறுத்துகின்றனர். மேலும் இன்று க.பொ.த. சாதாரணநிலை, உயர்நிலை தகுதிகள் பெற்றோருக்கு ஆசிரியர் பதவி வாய்ப்புகள் வழங்கப்படுவதன் காரணமாக அவர்கள் உயர்கல்வியில் ஊக்கமிழக்க நேரிடுகிறது.

விஞ்ஞானத்துறை சார்ந்த பயிற்சி நெறிகளில் (மருத்துவம், பொறியியல்) மாணவர்கள் போதிய தகுதிகளை பெறுவதில்லை; சேர்ந்து பயிலுமிடத்து அப்பயிற்சி நெறிகளில் ஆசிரியர் பற்றாக்குறை உண்டு. அத்துடன் அப்பயிற்சி நெறிகளைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழக அனுமதியை பெறுவதில் போட்டி மிகத் தீவிரமாக காணப்படுகின்றது. இந்நிலையில் மலையக மாணவர்கள் பெருமளவிற்கு வர்த்தகவியல் துறையில் நாட்டம் கொள்வதாக தெரிகின்றது. ஆயினும் இறுதியில் போட்டி காரணமாக அத்துறையிலும் அனுமதி பெற முடியாது போகின்றது.

இன்று வேலைவாய்ப்பு, கல்வி வாய்ப்பு போன்ற துறைகளில் இனவிகிதாசாரம் வலியுறுத்தப்படுகின்றது. இன்று பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களின் மொத்த தொகை 30,000 ஆகும்.(இதில் தாமதமாக அனுமதிக்கப்பட்டோரும் அடங்குவர்.) இன விகிதாசாரப்படி மொத்த மாணவருக்கு 1500 பேராவது இந்திய மரபுவழித்தமிழராக இருத்தல் வேண்டும். ஆயினும் எமது கணிப்பில் 200 மலையக மாணவர்களாவது பயிலுகின்றார்களோ என்பது ஐயத்திற்குரியது. தகவல்களின்படி இதை விட குறைவாக இருக்கக் கூடும். நுணுகி நோக்குமிடத்து, போதனாபீட வகைப்படியான புள்ளிவிபரங்களின்படி மருத்துவம், பொறியியல்,விஞ்ஞானத் துறைகளில் ஒரிரு மாணவர்களே சேர்ந்து பயிலுவதாக கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழகம் தகவல் வெளியிடுவதில்லை

மேலும், இந்திய மரபுவழித் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக கருதப்பட்டு அவர்களுக்கென்று வேலைவாய்ப்புகளில் ஒரு வீதாசாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இன்றைய பல்கலைக்கழகங்களில் மொத்தமாகவும் பயிற்சிநெறி வகைப்படியும் எத்தனை இந்திய மரபுவழித்தமிழ் மாணவர்கள் பயிலுகின்றனர் என்பதை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தகவல்களை வெளியிடுவதில்லை. மொத்தமாக எத்தனை தமிழ்மாணவர்கள் உள்ளனர் என்ற, விபரங்களே தரப்படுகின்றன. இனவிகிதாசாரத்தில் இந்திய மரபுத்தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை மிக, மிக குறைவாக இருக்கும் என்பதால் அவ்வாறு தனியாக விபரங்கள் தரப்படுவதில்லைப் போலும்.

இன்று இயங்குகின்ற பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக்கு பலநூறு கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இப்பெருந்தொகை முதலீட்டிற்கு கடந்த ஐம்பது ஆண்டுகாலப் பகுதியில் மலையக தமிழ்மக்களின் உழைப்பால் முன்னேறிய பெருந்தோட்டத் தொழில்துறை பெரும் பங்காற்றியுள்ளது. ஆயினும், மலையக தமிழர்கள் உயர்கல்விக்கான இம்மாபெரும் முதலீட்டிலிருந்து குறிப்பான நன்மைகளை பெற்றதாக கூறுவதற்கில்லை

இன்னுமொரு நோக்கில் பார்க்குமிடத்து இன்று மலையகத்து நகரங்களில் வளர்ச்சிபெற்றுள்ள முக்கிய பாடசாலைகளில் காணப்படுகின்ற வசதிகளையும் வாய்ப்புகளையும் மலையகப் பிள்ளைகள் எந்தளவிற்கு பயன்படுத்துகின்றனர் என்பதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். 1977ஆம் ஆண்டின் பின்னர் சில குறிப்பிட்ட வளர்ச்சிகள் ஏற்பட்டன. சுவீடன், ஜேர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகளின் உதவிகள் கிடைத்துள்ளன. தோட்டப் பாடசாலைகளை படிப்படியாக அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் வகையில் மலையக இளைஞர்களுக்கு ஆசிரியர் பதவிகள் வழங்கப் பட்டுள்ளனமலையக பாடசாலைகளின் மேற்பார்வைக்கென மலையகத்தைச் சார்ந்தவர்கள் மேலதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் மலையக இளைஞர்கள் இவ்வாய்ப்புகளை பயன்படுத்தி புதியதொரு உந்துசக்தியுடன் உயர்கல்வியில் பிற மக்கட்பிரிவினர் வளர்த்துக்கொண்ட கல்வி பாரம்பரியத்திற்கு இணையான ஒரு பாரம்பரியத்தை வளர்க்கவேண்டிய ஒரு அவசியமும் உள்ளது.

இன்று மலையகத்தை பிறப்பிடமாக கொண்ட ஆசிரியர்கள் மலையகமெங்கும் பரந்தளவில் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பாடசாலை அதிபர்களாகவும், மேலதிகாரிகளாகவும் பணிபுரிகின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் ஒரு முக்கிய கல்விப்பணி ஒன்று உண்டு. இவர்கள் அனைவரும் தமது கல்வித் தகைமைகளை மேம்படுத்துவதற்கான பல வாய்ப்புகள் இன்று இருக்கின்றன. பல்கலைக் கழகங்கள், திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம் போன்ற பல உயர்கல்வி நிலையங்கள் நடாத்தும் வெளிவாரி பயிற்சி நெறிகளும் தொலைக்கல்வி பயிற்சி நெறிகளும் மலையக ஆசிரியர்களுக்கு பல கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன. அவர்களுக்கு பேருதவி வழங்கும் வகையில் ஆர்வம் கொண்ட இளம் அறிஞர்கள் மலையக நகர்ப்புறங்களில் பல போதனாப்பீடங்களை ஏற்படுத்தி கல்வி பணியாற்றிவருகின்றனர். வெளிவாரி மாணவர்கள், மலையக ஆசிரியர்கள் இவ்வசதிகளை வாய்ப்புகளை பயன்படுத்தி தமது சுயமுயற்சியில் பல்கலைக்கழக பட்டங்களை பெற்று தமது கல்வி வாழ்க்கையில் வெற்றிபெறும் நிலைமைகளை இன்று நாம் காண்கின்றோம்.

மலையக தமிழர்களுக்கென்று ஒரு வரலாறு உண்டு. அவர்களுக்கென்று ஒரு புவியியல், பிரதேசமும், அதனை சார்ந்த மூலவளங்களும் உண்டு. அத்துடன் அவர்களுக்கென்று சமூகவியல், பண்பாட்டு பொருளியல் கல்விசார் நிலைமைகளும் உண்டு. இவைப்பற்றிய ஆய்வுகள் சிந்தனைகள் என்பன மலையகத் தமிழரின் எதிர்கால வளர்ச்சிக்கு அத்தியவசியமானது. மேலும் மலையக தமிழருக்கென்று கல்வி நிலையங்கள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள், தொழிற்சங்கள் போன்ற பல்வேறு அமைப்புகள் உண்டு. ஆயினும் மேற்கூறிய ஆய்வுகளை கொண்டு நடத்தவும் சிந்தனை வெளியிடவும் இவ்வமைப்புகளுக்கு தலைமை தாங்கவும் தேவையான அறிஞர் பற்றாக்குறை உண்டு. இதற்கு மலையக மக்கள் உயர்கல்வித்துறையில் பின்தங்கி நிற்பது முக்கிய காரணமாகும். மேற்கூறிய பல் வேறு துறைகளிலும் கற்றுத்தேறிய மலையக அறிஞர்கள் பலர் உருவாகி யிருந்தாலும் இன்று அவர்களுடைய பல்வேறு நிலைமைகளில் பல முன்னேற்றங்கள் கண்டிருக்க முடியும்.

---

## துர்ப்பாக்கியம்

நாம்
போராடி வென்ற
புனிதமான
உரிமைகள் — இன்று
'பூட்ஸ்"
கால்களால்
நசுக்கப்படுகின்றன.

உழைக்கும்
மக்களுக்கு
உச்சிச் சூரியன் — கூட
கப்பம்
கேட்கும் போது
சமாதானச் சூரியன்
மட்டும்
சும்மாயிருந்து விடுவானா..?

ஆலைகளெல்லாம்
ஏழைகளின்
சோலைகளா..?
இல்லை
தூரங்களில் — கூட
பாரங்கள் தான்.

மக்களை
பிரித்துத்தான்
மகுடம்
சூட்டிக்கொள்ள
வேண்டுமென்றால்
அது —மானுடம்
பெற்றுக்கொண்ட
துர்ப்பாக்கியமே.

*மிடில்டன்,சி.சாரதாம்பாள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Centre for women & Development
CWD 07, RATNAM LANE
Off K.K.S. ROAD
VANNARPANNAI,
JAFFNA — SRI LANKA

கம்பனிகளை பொறுத்தவரை உச்ச நோக்கம் இலாபமாகவே இருக்கும் தோட்டத்தொழிலாளர்களுக்கு நாட்சம்பளம் என்ற காரணத்தால் வேலைக்குறைப்பு செய்வதன் மூலம்கம்பனிகள் பெறுமளவு பணத்தை மிச்சப்படுத்தலாம்.

மேனகா கந்தசாமி

# தோட்ட தனியார்மயமும் புதிய கட்டமைப்பும்

தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டன என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் இத்தோட்டங்கள் ஏன் தனியார்க்கு ஒப்படைக்கப்பட்டன? எவ்வாறு ஒப்படைக்கப்பட்டன? என்று கேட்டால் ஒரு தெளிவற்ற விளக்கமே கிடைக்கும்.

ஆரம்பத்தில் வெளிநாட்டு கம்பனிகளிடம் இருந்த தோட்டங்கள் மக்கள் நலன் கருதி அரசமயமாக்கப்பட்டன. அரசமய மாக்கப்பட்ட பின் குறிப்பாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை (J.E.D.B), இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (S.L.S.P.C) உசவசம, நிலச்சீர் திருத்த ஆணைக்குழு என்பவற்றின் நிர்வாகத்தின் கீழ் தோட்டதுறை 1972, 1973 முதல் இயங்கியது. நாளடைவில் உசவசம நீங்கலாக ஏனைய நிறுவனங்கள் தோட்டதுறையை நிர்வகித்ததுடன் குறிப்பாக ஜனவசம, அரச பெருந்தோட்டயாக்கம் என்ற இரு அமைப்புகளும் தோட்டங்களை நிர்வகிக்கலாயின. இந்நிறுவனங்கள் 1992 வரை இத்தோட்டங்களை நிர்வகிப்பதற்காக பாரிய கடன் தொகையை இரு அரசவங்கிகளிடமிருந்து பெற்றன. இக்கடனை மீளச் செலுத்த முடியாத சூழ்நிலையும் மேலதிக கடனை பெறமுடியாத சூழ்நிலையும் ஏற்படவே வெளிநாட்டு நிதியங்களை நாட வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டது.

சர்வதேச கடன் வழங்கும் நிதிநிறுவங்களான உலகவங்கி, சர்வதேச நாணய நிதிச் சபை என்பவற்றை அரசு நாடியபோது அவை அரசுக்கு சொந்தமான இத்தோட்டங்களை தனியார் கம்பனிகளிடம் ஒப்படைத்தால் கடன் உதவி வழங்கத் தயார் என அறிவித்தது. இந்நிபந்தனையை நிராகரிக்க முடியாத அரசு தோட்டங்களை தனியார்மயமாக்கும் முயற்சியில் ஈடுப்பட்டது.

1970/ 1972 ல் தேசியமயம் ஒரு கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டபின் தனியாருக்கு சொந்தமான தொழில்துறைகள் அனைத்தும் பகிரங்க கம்பனியின் கீழ் நடத்த வேண்டும் என்ற அரசியல் கருத்தியல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் நிலச்சீர் திருத்தச் சட்டம் 1972ல் உருவாக்கப்பட்டது. இச்சட்டத்தின் படி பெருந்தோட்ட நிலங்களை யாருக்கும் விற்கமுடியாது. விற்பதானால் சட்டத்தையே மாற்ற வேண்டும்.ஆயினும் இச்சட்டத்திற்கமைய பகிரங்க கம்பனிகளை அரசு உருவாக்கி அக்கம்பனிகளின் கீழ் முகாமைத்தவத்தை தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைக்க முடியும்.

இதற்கிணங்க தனியார்மயத்தின் ஆரம்பப்படியாக அரசாங்கம் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசிற்கு சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளை பகிரங்க கம்பனிகளை மாற்றியது. இதற்கிணங்க அரசு தோட்டங்களை தனியார் மயமாக்குவதற்காக இருபத்திரண்டு பகிரங்க கம்பனிகளை ஸ்தாபித்தது. ஜனவசம,அரசுபெருந்தோட்டயாக்கம், என்பவற்றின் கீழ் இயங்கிய உயர் அதிகாரிகளை கொண்டே பகிரங்க கம்பனிகளை உருவாக்கியது. உதாரணத்திற்கு நோக்கின் கஹவத்தை பிளான்டேசன் லிமிடட் கண்டியில் இயங்கிய ஜனவசம சபையின் நிர்வாகிகளை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதுடன் ஜனவசம காரியாலயமும் இதற்கென ஒதுக்கப்பட்ட தோட்டங்களும் அப்பகிரங்க கம்பனியின் கீழ் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வரச பகிரங்க கம்பனி தமது தோட்டங்களை முகாமைத்துவம் செய்வதற்காக பிறிதொரு கம்பனிக்கு குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்கு விடும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இதன்படி கஹவத்தை பகிரங்க கம்பனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது தோட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பினை "பிக்கல் பெக்கஸ்" எனும் உள்நாட்டு தனியார் கம்பனிக்கு ஐந்து வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளது. இவ்வுள்நாட்டுக் கம்பனி நிதிபற்றாக்குறையால் வெளிநாட்டு கம்பனியான டாடா (இந்தியா) கம்பனியுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

நிர்வாகம் தொடர்பான விடயங்களை உதாரணமாக வேலைமாற்றம் என்பவற்றை தனியார் கம்பனியே செய்யும். ஆயினும் இத்தொழிலாளர்கள் தங்கள் வேலையில் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக வழக்கு தொடரின் அதற்கு பொறுப்பாளி அப்பகிரங்க கம்பனியே. தனியார் கம்பனி தனது லாபத்தில் கிட்டதட்ட 10% ஐ பகிரங்க கம்பனிக்கு வழங்க வேண்டும் என கூறப்படுகின்றது.

ஜனவசம, இலங்கை அரச பெருந்தோட்டயாக்கம் என்பன இயங்கிய நேரத்தில் சமூக நலன்புரிச் சேவையில் கடமையாற்றியவர்களில் உள்ள அதிகமானோரை கொண்டே தற்போது சமூக நலன்புரிச் சேவைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் பெருந்தோட்ட விடமைப்பு சமூகநலன் நிதியம் (TRUST) உருவாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இப்பிரிவினருக்கு நிதி உதவி சுதந்திரமான முறையில் வெளிநாடுகளில் பெறலாம் எனக் கூறப்பட்டது. அதேபோல் கம்பனிகள் தங்கள் லாபத்தில் ஒரு சிறு பகுதியை இதற்கு வழங்க வேண்டும் எனவும் கூறப்பட்டதாக தெரியவருகிறது.

ட்ரஸ்ட் (TURST) தோட்ட கமிட்டிகளை உருவாக்கி தங்கள் செயற்பாட்டை செய்ய முயற்சிக்கின்றது. இத்தோட்டகமிட்டியில் தொழிற்சங்கத் தலைவர்கள், சுப்பிரின்டன், கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர் போன்றோர் அங்கம் வகிப்பர். குறிப்பிட்ட தோட்டத்தில் உள்ள குடும்பங்கள் இதில் அங்கத்துவம் பெற விரும்பின் ரூ 250/- கட்ட வேண்டும் என்பது நிபந்தனை. இக்கமிட்டி வீடு திருத்த வேலைகளை செய்யும்.

பொதுவாக நோக்கின் கம்பனிகள் பொறுப்பேற்றபின் தோட்டத் தொழிலாளர்களின் வேலைநாட்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன், வேலைப்பளு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏலவே அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவினால் பாதிப்புற்றுள்ள தோட்டத் தொழிலாளர்களை அதுமிகவும் பாதித்துள்ளது. இதன்காரணமாக ஆங்காங்கே தொழிலாளர்கள் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபட நிர்ப்பந்தித்துள்ளமையை காணமுடிகின்றது.

கம்பனிகளை பொறுத்தவரை உச்ச நோக்கம் இலாபமாகவே இருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளம் என்ற காரணத்தால் வேலைக்குறைப்பு செய்வதன் மூலம் கம்பனிகள் பெறுமளவு பணத்தை மிச்சப்படுத்தலாம். இதுவே மாத சம்பளமாக இருப்பின் வேலை குறைப்பு சம்பளத்தில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்காது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

தோட்டங்கள் தனியார் மயமாகி ஒருவருடம் கழிய முன்னர் தோட்டங்களில் மேற்கொண்ட சமூகநலச் சேவைகள் பெரிதும் பாதிப்படைந் துள்ளது மட்டும்மல்லாமல் நிர்வாக்த்தின் தொழில்சார் நடவடிக்கைகளும் மோசமடைந்துள்ளன. எனவே எதிர்வரும் காலங்களில் தோட்டத் தொழிற்துறை எவ்வாறான நிலையை சென்றடையும் என்பது கேள்விக்குறியாகும்.

| பகிரங்க கம்பனிகள் | தனியார் கம்பனிகள் |
|---|---|
| ஹொரண பிளான்டேஷன்ஸ் லிமிடட் | ஸீஎக்ஸ் (Ceyexxe Ltd) |
| மஸ்கெலி பிளான்டேஷன்ஸ் லிமிடட் | போபாஸ் வோகர் (Forbes & walkers Ltd) |
| தலவாக்கெல பிளான்டேஷன்ஸ் லிமிடட் | ஹேலீஸ் (Hayleys Ltd) |
| அக்கரபத்தன பிளான்டேஷன்ஸ் லிமிடட் | ஈ.பீ. கிரேசி (E.B. Creasy & co Ltd) |
| மத்துரட்ட பிளான்டேஷன்ஸ் லிமிடட் | கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (Chemical Industries) |
| உட்புஸ்ஸெல்லாவ பிளான்டேஷன்ஸ் லிமிடட் | எய்ட்கென் ஸ்பென்ஸ் (Aitken Spence & co Ltd) |
| எல்பிட்டிய பிளான்டேஷன்ஸ் லிமிடட் | காசன் கெம்பபெச் (Carson cumberbatch & co Ltd) |
| நமுனுகுல பிளான்டேஷன்ஸ் லிமிடட் | பிசி கொம்பியுடர் (B.C . computers Ltd) |
| பொகவந்தலாவ பிளான்டேஷன்ஸ் லிமிடட் | மெட்ரோபொலிட்டன் (Metropolitan Agencies (Pvt) Ltd) |
| கேகாலை பிளான்டேஷன்ஸ் லிமிடட் | ரிச்சட் பிரிஸ் (Richard Peiris & co Ltd) |
| மல்வெத்தவெலி பிளான்டேஷன்ஸ் லிமிடட் | மெக் பெக் எக்ஸ்போட் (Magpek Exports Ltd) |
| மடுல்சீம பிளான்டேஷன்ஸ் லிமிடட் | ஸ்டேசின் எக்ஸ்போட்ஸ் (Stassen Exports Ltd) |
| அகலவத்தை பிளான்டேஷன்ஸ் லிமிடட் | மெக்வுட் லிமிட் (Mackwoods Ltd) |
| கொட்டகல பிளான்டேஷன்ஸ் லிமிடட் | ஜோஜ் ஸ்டுவட் (George Steuart & co Ltd) |
| கஹவத்தை பிளான்டேஷன்ஸ் லிமிடட் | பிக்கல் பெக்கஸ் (Pickle Packers Ltd) |
| புஸ்ஸெல்லாவப் பிளான்டேஷன்ஸ் லிமிடட் | ப்ரீலங்கா ரிரேடிங் (Free Lanka Trading co ) |
| குருநாகல பிளான்டேஷன்ஸ் லிமிடட் | லேக்கவுஸ் பிரின்டஸ் (Lake House Printers & Publishers) |
| கெலனிகவலி பிளான்டேஷன்ஸ் லிமிடட் | டிப்ட் புரடக்கட்ஸ் (Dipped Products Ltd) |
| வடடவளை பிளான்டேஷன்ஸ் லிமிடட் | லென்கம் சிலொன் லிமிட் (Lankem Ceylon Ltd) |
| அப்புகஸ்தன பிளான்டேஷன்ஸ் லிமிடட் | பின்லே கெமிக்கல்ஸ் டை (Finlay Chemicals & dyes (Pvt) Ltd) |
| பலாங்கொட பிளான்டேஷன்ஸ் லிமிடட் | போப்ஸ் சிலோன் லிமிட் (Forbes Ceylon Ltd) |
| சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிடட் | எஸ்.ஏ.சில்வாசன்ஸஸ் லங்காலிமிட் (S.A.Silva & Sons Lanka (Pvt)Ltd) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "டெய்லிமிரர்"
# பொ. கிருஷ்ணசுவாமி.



அட்டன் கிட்டுவைத் தெரியுமா?

ஆனால் பொ. கிருஷ்ணசுவாமி என்றால் ஈழத்து இலக்கிய பத்திரிகை உலகில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு நிச்சயம் தெரியாமல் இருக்காது.

விளம்பர வெளிச்சம் கண்டு கூச்சசப்படுவார். அதனால் பொ.கிருஷ்ணசுவாமியை இன்றைய மலையகம் சரிவர தெரிந்து வைத்திருக்கவில்லையென்றால் அது வியப்பில்லை.

அவர் குடத்தில் இட்ட விளக்கு. குன்றின் மீது இருந்தும் முயற்சியாக இல்லாவிடினும் அவரை இளம் மலையகத்துக்கு அறிமுகம் செய்து வைக்கும் பணியில் ஒரங்கமே இக்கட்டுரை.

தமிழிலும் ஆங்கிலத்திலும் நிறைய எழுதியவர் அவர். அவற்றில் எதுவும் நாலுருவில் வெளிவராதது பெருங்குறை.

கன்னங்கராவின் இலவச கல்வி மலையகமண்ணில் கால்பதிக்கு முன்னரே 1930 -40 களில் மிஷனரிகளின் கல்வி நிலையங்களில் கற்று தேறிய மலையக அறிவு ஜீவிகளில் அவரும் ஒருவர்.

அந்த நாட்களில் எஸ்.எஸ்.சி என்றாலே பெரிய வெற்றி. தேறி விட்டலோ சாதனை. கிருஷ்ணசுவாமி அவர்கள் பேராதனிய பல்கலைக்கழகம் வரை சென்று ஒராண்டு சட்டம் படித்து முடித்தது உலகமகாசாதனை.

எஸ்.எஸ்.சிக்கு பின் சட்டம் படிக்க அப்போது வாய்ப்பு இருந்தது.

உயர்கல்வி என்பது அந்நாட்களில் மலையகத்தவர்க்கு . எட்டாக்கனி தகப்பனார் பொன்னையா கங்காணி அட்டன் வட்டாரத்திலே பெயர் போன பெரிய கங்காணியாக இருந்தும் கூட கிருஷ்ணசுவாமி அவர்களுக்கு சட்டம் பயின்றும் பட்டம் பெறமுடியவில்லை.

அதற்கு அவசியம் கூட அப்போது அவருக்கு இருந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் அவர் கற்ற கல்விக்கு வெள்ளைக்காரன் காலத்திலே இலகுவில் வேலைக்கிடைக்கும். கிடைத்தது.

கொழும்பில் தேயிலை ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் லிகிதர் வேலை. ஆனால் அவர் ஆர்வம் அவரை பத்திரிகைதுறையில்தான் நுழைத்தது.

மலையகத்திலிருக்கும் ஆங்கில பத்திரிகை உலகில் அடியெடுத்து வைத்த தலைமகன் இவர். இவருக்கு முன் கலஹா இராமநாதனும் பின்னர் நாவலப்பிட்டி கதிரேசனும் தினகரனில் பத்திரிகையாளராக சேர்ந்திருந்தனர். என்.எஸ். சிவலிங்கம் தினகரன் விளம்பர பகுதியில் இருந்தார். சி.எஸ். காந்தி வீரகேசரியில் சேர்ந்து பணிபுரிந்தார். பத்திரிகையாளர் என்ற முறையிலே இலங்கையின் வரலாற்றில் சிறப்புமிக்க பல சம்பவங்களுக்கு நேரடி சாட்சியாக இருந்தவர் கிருஷ்ணசுவாமி.

எஸ். எம். கார்மேகம்

1958 இனக் கலவரத்தின் போது பொகவந்தலாவையில் அய்யாவு பிரான்சிஸ் சுட்டுக்கொல்லப்பட்டதால் அப்பகுதி தொழிலாளர்கள் கொதிப்படைந்தனர். அவர்களை அடக்க கவச வாகனங்களுடன் இராணுவம் பொகவந்தலாவையை நோக்கி படை யெடுத்தது. அதனை மேற்கொண்டு முன்னேற விடாமல் தடுத்து நோர்வுட் பகுதியில் தொழிலாளர்கள் ஆர்ப்பரித்து நின்றபோது 'மெஷின்கன்னைக் காட்டி " சுட்டுவிடுவோம் "' என்று இராணுவம் பயமுறுத்தியது. " சுடுங்கடா பேடிகளா." என்று தொழிலாளர் நெஞ்சை நிமிர்த்தி நின்றபோது இராணுவம் அவர்களுடன் சமரசம் செய்து கொண்டது.

அந்த இடத்திலே நிருபர் என்ற முறையில் நின்று கொண்டிருந்த கிருஷ்ணசுவாமி அவர்கள் இன்றைக்கும் கேட்டாலும் அச்சம்பவத்தை கூறுவார்.

பத்திரிகையாளரான பிறகும் கூட பல நல்ல வாய்ப்புகளை நழுவிட்டவர் அவர்.

1960களில் அரசியலுக்கு இழுத்துவரப்பட்ட இளம் கைப்பெண் சிறிமா தயங்கி தயங்கி முதன்முதலாக தேர்தல் பிரச்சார மேடையேறியது அட்டனில்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையில் ஏறி நின்று தம் கணவர் பணிபற்றி நினைவு கூர்ந்த சிறிமா தேம்பி அழுதார். அவரது கணவர் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயகா சுட்டுக் கொல்லப்பட்டு ஆறுமாதங்கள் கூட ஆகாத நிலையில் அவர் வேறு என்ன செய்வார்.

அந்த அரசியல் கூட்ட செய்தியை "மோர்னிங் டைம்ஸ்" (Morning Times) நிருபர் என்ற முறையில் அப்பத்திரிகைக்கு அனுப்பினார் கிருஷ்ணசுவாமி. அப்பத்திரிகையில் அச்செய்தியை மறுநாள் 'Weeping widow moves the crowd' என்று தலைப்பிட்டு அமர்க்களமாய் வெளியிட்டு இருந்தது.

இதைக்கண்டு சிறிமாவுக்கு வருத்தம். "யாரப்பா இந்த நிருபர்?" என்று அவர் கேட்டதும் "அடியேன்" என்று கூறி அட்டன் பீக் ஹோட்டலில் போய் நின்றார் கிருஷ்ணசுவாமி.

அச்சில் வந்ததற்கும் தான் அனுப்பியதற்கும் இருந்த வேறுபாட்டை ஆதாரத்துடன் நிரூபித்ததும் சிறிமா அமைதியானார். பின்னர் அவர் தமது கூட்டங்களில் கிருஷ்ணசுவாமியை தேடினார் என்றால் அவரது எழுத்தில் சிறிமா எத்தனை நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்?!

ஆனாலும், சிறிமா பிரதமரானதும் அவருடன் தனக்கு இருந்த அறிமுகத்தின் மூலம் ஆதாயம் தேட இவர் முயலவில்லை. கற்றறிந்த பல தமிழ் இளைஞர்களை தேடிக் கொண்டிருந்த சிறிமாவிடம் "கிருஷ்" சேர்ந்திருந்தால் அவரது வாழ்க்கை வேறு விதமாக இருந்திருக்கும்.

பிறகு புதுடில்லியிலே சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் கையெழுத்தான போது அங்கு நிருபர் என்ற முறையிலே பிரசன்னமாகி இருந்த கிருஷ்ணசுவாமி சிறிமாவின் கவனத்தை சுலபமாக ஈர்த்திருக்க முடியும். அதை அவர் செய்யவில்லை.

60க்கு முன் உள்ள சில ஆண்டுகளில் அவர் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றிய நாட்களில் பெரிய தொப்பி தோட்டத்திலிருந்து இரயில் பாதை வழியாக அட்டனுக்கு நடந்து வருவார். வெண்ணிற ஆடையில் எடுப்பான இளைஞராக பளீரென்று இருப்பார்.

மாணவராக இருந்த நாங்களும் கொட்டகலையில் இருந்து இரயில் பாதை வழியாக அறுபது அடி பாலம் சிங்கமலை சுரங்கம் கடந்து அட்டனுக்கு நடப்போம். கிருஷ்ணசுவாமி அவர்களுடன் சேர்ந்து கொள்வோம். ஆர். எல். ஸ்டீவன்சனும், டிக்கன்ஸும், லோங்ஃபெலோவும், ஷேக்ஸ்பியரும் இன்னோரன்ன பலரும், எங்கள் ஆங்கில ஆசிரியருடன் சேர்ந்து எங்கள் பிஞ்சு மண்டைக்குள் ஏற்படுத்திய குடைச்சல்களை இரயில் பாதை வழியே கிருஷ்ணசுவாமி அவர்களுடன் நடந்த போது நடந்த கால்மணி, அரைமணி நேர நடைபாதை வகுப்புகள் தீர்த்து வைக்கும். "பரவாயில்லையே" என்று ஆங்கில ஆசிரியர்களின் பாராட்டுகளையும் பெற்றுக்கொடுக்கும்.

அவர் அட்டனில் இருந்த நாட்களில் மலையக கலாமன்றம் தொடங்கினார். அதன் தலைவர் சி.வி.வேலுப்பிள்ளை. "கிருஷ்" தான் செயலாளர்.அமைச்சர் பி.தேவராஜ் பொருளாளர் என்று நினைவு. "காமன் கூத்து" கொழும்பில் மேடையேறவும் வானொலியில் ஒலிப்பரப்பாகவும் மலையக கலாமன்றம் ஒரு காரணம். அதற்கு பின்னணியில் இருந்தவர் கிருஷ். அவர் கொழும்புக்கு வந்த பின்பு கலைமன்றம் செயலிழந்தது.

பத்திரிகையாளனுக்கு எழுத்து என்பது அவனது ஆத்மசுகத்துக்கு ஒரு வடிகாலாக எப்போதுமே இருந்து விடுவதில்லை.

எழுதவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு எப்போதுமே உண்டு. அப்படி எழுதுபவை அனைத்துமே சாகா வரம் பெற்று அமரத்துவம் வாய்ந்த இலக்கியங்களாகி விடுவதில்லை. என்றாலும் அவற்றில் சில கால ஓட்டத்தையும் கடந்து தப்பிப் பிழைப்பதும் உண்டு.

கிருஷ்ணசுவாமி அவர்கள் ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக எழுத்து பணியில் ஈடுபட்டு வருகிறார். ஆங்கிலத்தில் தான் அதிகம் எழுதினார். தமிழிலும் சிறுகதைகள், தொடர்கதைகள், கட்டுரைகள் எழுதியதும் உண்டு. "மன்னிப்பாய உனக்கா" என்ற தலைப்பில் "50"களில் அவர் எழுதிய சிறுகதை வண்ணப்படங்களுடன் தினகரனில் வந்தது. அதைத் தொடர்ந்து அவர்படைத்த எழுத்தோவியங்கள் எங்கே என்று கேட்டால் 83 இனக்கலவரத்தில் சூறையாடிவிட்டது என்று கூறி சிரிக்கிறார்.

நையாண்டியாக அங்கதசுவைபட (Satire) நடைச்சித்திரங்கள் எழுதுவது அவருக்கு கைவந்த கலை. "சன்டே டைம்ஸ்" (Sunday Times) கட்டுரை எழுத்தாளராக (Feature Writer) அவர் பணியாற்றிய நாட்களில் அவர் எழுதியவைகளில் பாராட்டை தேடித்தந்தவை உண்டு. கவிஞர் நாதன் போன்ற சிலரின் மிரட்டலுக்கும் அவரை இலக்காக்கியதும் உண்டு.

கவிஞர் எஸ்.எஸ். நாதன் என்றாலே "பிட்" நோட்டீஸ்தான் நினைவுக்கு வரும். அவர் 'பிட்' நோட்டீஸ் யுகத்தை சேர்ந்தவர். விளம்பர கேசரி என்று ஒரு சிற்றேட்டினை வைத்துகொண்டு மிரட்டுவார்.

அப்படிதான் அவர் கிருஷ்ணசுவாமியையும் மிரட்டினார். வசைபாடும் வல்லாளரான நாதன் விளம்பர கேசரியிலே "அட்டன் கிட்டுவின் வண்டவாளம் அடுத்த இதழில் தண்டவாளம் ஏறும்" என்று அச்சுறுத்தி இருந்தார். அடுத்த இதழ் எப்போது வரும் என்பது அவருக்கே தெரியாது. அந்த இதழ் வருவதற்குள் கிருஷ்ணசுவாமி குடும்பத்துடன் நாதன் நெருக்கமாகி விட்டார்.

மலையக அரசியல் தொழிற்சங்க, கலை, இலக்கிய உலகோடு அடையாளம் காணப்படுபவர் நாதன். அவரது ஆதர்ச தலைவர் கோ. நடேசய்யர். அய்யரின் தொழிற்சங்க அலுவலகம் அட்டன் பொஸ்கோஸ் கல்லூரிக்கு அருகில் இருந்த நாட்களில் அய்யரின் ஏவலாள், சமையலாள் நாதன்தான். அதனால் அய்யரின் சாயல் அவரிடமும் மிதப்பாக தெரியும்.

"மோர்னிங்டைம்ஸ்" (Morning Times) மூடப்பட்டதும் பின்னர் "டைம்ஸ் ஆஃப் சிலோன்" (Times of ceylon) மாலைத் தினசரியாக வெளிவந்தது. "டெய்லிமிரர்" (Daily Mirror) என்ற ஆங்கில நாளேடு காலை தினசரியாக 1961ல் டைம்ஸிலிருந்து வெளியிடப் பட்டது. அதன் செய்தியாசிரியரானார் கிருஷ்.

தமிழ் மக்களின்குரலாக விளங்கிய அந்த நாளேட்டின் ஆசிரியர் ரெஜிமைக்கேல் டைம்ஸ் குரூப் பிரதம ஆசிரியர் ஆனபொழுது கிருஷ்ணசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டெய்லிமிரர்" பொறுப்பாசிரியர் ஆனார். ரெஜி வெளியேறியதும் அவருடன் இவரும் வெளியேறிவிட்டர்.

பிறகு அமைச்சர் தொண்டமான் அவர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அவரை இணைத்துக் கொண்டார். நல்லமுறையில் இ.தொ.கா. இவரை தொடர்ந்து ஆதரித்து வந்திருந்தால் மலையக கலை இலக்கிய உலகுக்கு தலைசிறந்த ஒரு எழுத்தாளர், பத்திரிகையாளர், பணிதொடர்ந்திருக்கும்.

மலைநாட்டின் வரலாற்றினை மிகச்சரியாகவும் தெளிவாகவும் எழுதக்கூடிய ஆற்றல் உள்ளவர் கிருஷ்ணசுவாமி. அதற்கான வாய்ப்பும் வசதியும் அவருக்கு இப்போது உண்டு. எழுதிக்கொண்டிருக்கிறார் என்றே தோன்றுகிறது.

83 இனக்கலவரம் அவரது உயிர் மானம், மனஉறுதி ஆற்றலை விட்டுவிட்டு, இதர லௌகீக பொருட்கள் அனைத்தையும், அவர் பெரிதும் மதித்த அரிய இலக்கிய படைப்புகளையும் பொசுக்கிவிட்டது. அனைத்தையும் இலங்கையில் இழந்து துணிச்சலை துணையாக கொண்டு தமிழ்நாட்டில் காலடி வைத்த கிருஷ்ணசுவாமி அவர்கள் "நியூஸ்டுடே" (News Today), டைம்ஸ் ஆஃப் இந்தியா (Times of India) நாளேடுகளில் சிலகாலம் கடமையாற்றிய பின், கடல்போன்ற இந்தியன் எக்ஸ்பிரஸின் ( Indin Express) மதுரை பதிப்பு தலைமை நிருபராக சங்கமமானார். வாழ்வில் மலைப்போன்று வந்த அதிர்ச்சிகளை எல்லாம் நண்பர்கள் பனிபோல் மறைய செய்து விட்டனர் என்கிறார் கிருஷ். "குருஜி" என்று அவரை எப்போதும் அன்போடு அழைத்து ஆதரித்த மதுரா நிறுவன தலைவர் வி.கே.டி.பாலனை அவர் நன்றியுணர்வுடன் நினைவு கூர்கின்றார்.

சென்னை மந்தவெளியிலே தாம் தங்கி இருந்த வீட்டில் புத்தக குவியல்களுக்கு மத்தியில் மூழ்கி போயிருந்தி அவரை "குன்றின் குரலுக்காக" பேட்டி என்றதும் சிரித்து சமாளித்தார். உங்களுக்கு தெரியாததா. புதிதாக நான் என்ன சொல்ல என்று மழுப்பிவிட்டார்.

கிருஷ்ணசுவாமி பற்றி தனிநூலே எழுதலாம். அப்படி எழுதப்பட்டால் அது வளரத்துடிப்பவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கும்.

சந்தேகமில்லை.

# தாய்மாமன் சீதனங்கள்

மனித நேயப்பரிமாணங்களில் பாச உணர்வு என்பது தனித்தன்மையானது.

தாய் மகனிடம் வெளிப்படுத்தும் பாசம், தந்தை மகளிடம் வெளிப்படுத்தும் பாசம், கணவன் மனைவியிடம் வெளிப் படுத்தும் பாசம்....இப்படி வெவ்வேறு அளவுகளில் மனிதப்பரிமாண பாச உணர்வு-உறவு முறைகளில் பரிணமிக்கும்.

இதில் அண்ணன் தங்கை பாச உணர்வு தனித்தன்மையானது. இந்தப் பாச உணர்வு எப்படிப்பட்டது என்பதை பார்ப்போம்.

அவனோ வறுமையில் வாடும் ஒரு ஏழை.தனக்கு உறவென்று சொல்லிக்கொள்ள இருப்பதோ பக்கத்து ஊரில் திருமணம் செய்து கொடுத்துள்ள தன் ஒரே தங்கை. தங்கையின் வீட்டிலும் ஒரே வறுமை. அன்றாட கூலி வேலைப்பார்த்துதான் தங்கள் வயிற்றை கழுவவேண்டிய நிலை.

இந்நிலையில் தன் தங்கைக்கு குழந்தை பிறந்திருக்கும் செய்தி வருகிறது. தன் மனைவியிடம் "உனக்கு தெரியுமா..? நான் மாமனாகிவிட்டேன். என் தங்கைக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறதாம்" என்று கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க சொன்னபோது அவன் மனைவியும் "மகிழ்ச்சியோடு நீங்கள் உடனே போய் பார்த்துவாருங்கள். தாய்மாமன் இல்லையா நீங்கள்".... என்றாள். "மாமன் சீர் கொண்டு செல்வதற்கு என்னிடம் என்ன இருக்கிறது? சீர்வரிசை இல்லாமல் எப்படி போகமுடியும் என்ற தன் கணவனிடம் "பொன்னும் பொருளும் கொண்டு செல்வதுதான் சீர்வரிசையா? இருப்பதை கொண்டு செல்லலாமே" என்ற அவன் மனைவி, தன் கணவனிடம் இருந்த ஒரே ஒரு நல்ல வேட்டியை எடுத்து கொடுத்து, "எத்தனை சீர்வரியை கொண்டு சென்றாலும், தாய்மாமன் வேட்டிக்கு நிகரில்லை. இதில் தொட்டில் கட்டி உங்கள் மருமகனை இட்டு தாலாட்ட சொல்லுங்கள்" என்று தன் கணவனை அனுப்புகிறாள்.

தன் வறுமை நிலையை நினைத்து வருந்திக்கொண்டே தன் தங்கையின் ஊர் நோக்க ?நடக்கிறான்.போகும் வழியில் இலுப்பை மரத்தைக்கண்டவன் அதில் ஒரு கிளையை வெட்டி தொட்டில் கம்பாகச் செதுக்கிக் கொண்டு தங்கையின் வீட்டுக்குச் செல்கிறான்.

அண்ணனைக் கண்ட தங்கைக்கு மகிழ்ச்சி ஒரு புறம், தன் வீட்டு வறுமையை நினைத்து வருத்தம் ஒரு புறம். ஓடோடி சென்று தன் மகனை தூக்கி கொண்டுவந்து தன் அண்ணன் கைகளில் தவழ விடுகிறாள். தன் தங்கையின் மகனை கையில் வாங்கிய இவனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளும்புகிறது. இந்த காட்சியை கண்டுகொண்டிருந்த அவன் தங்கையின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோட, அவன் கைகளில் தவழ்ந்த குழந்தையோ தன் பிஞ்சு கால்களை தாய்மாமன் நெஞ்சில் உதைத்துப் பொக்கை சிரிப்பை சிந்திக் கொண்டிருந்தது.

கே.கருணாகரப்பாண்டியன்
காமராஜர் பல்கலைக்கழகம்
மதுரை

"என் மருமகனுக்கு தாய்மாமன் எவ்வளவோ சீர் செய்ய வேண்டும். என்னால் இயன்றது இதுதானம்மா" என்றவாறே தான் கொண்டு வந்திருந்த தன் வேட்டியையும்,இலுப்பை மரத் தொட்டில் கம்பையும் கொடுத்துவிட்டு விடை பெறுகிறான்.

சீர் கொண்டு வந்த அண்ணனுக்கு ஒருவேளை உணவளிக்க வழியில்லாத தன் வறுமை நிலையை நினைத்து வருந்திக் கொண்டு தெருவில் இறங்கி நடந்து செல்லும் அண்ணனைப் பார்க்கிறாள். பின் அண்ணன் கொண்டு வந்த வேட்டியில் தொட்டில் கட்டித் தாலாட்டுப்பாடுகிறாள்.

"பச்சை இலுப்பை வெட்டி
பால் வடிய தொட்டிலிட்டு....
தொட்டிலிட்டு போற மாமன்
பட்டினியாய்ப் போறானே".

தமிழ் இலக்கியத்தில் உள்ள இந்தப் தனிப்பாடல் மனித நேய பாச உணர்வுகளை மட்டுமா வெளிப்படுத்துகிறது? வறுமைமையும் அழகாக படம் பிடித்துக் காட்டுகிறது அல்லாவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Centre for Women & Development
87, RATNAM LANE,
Off K. K. S. ROAD
VANNARPANNAI,
JAFFNA — SRI LANKA.
CWD

கயானச் சிறுகதை

# பிரதமருக்கு ஒரு கடிதம்.

ஆங்கிலம் மூலம்: ஹறி நாராயன்.
தமிழாக்கம்: பண்ணாமத்துக்கவிராயர்.

எசெக்குய்போ கோஸ்ட்,
கயானா,
ஒக்டோபர், 1978.

அன்புத் தோழர் பிரதமர் அவர்களுக்கு,

உங்க கிட்ட எதையும் கேட்டு நான் இக்கடிதத்த எழுதல்லேங்க. என்ன நடக்குதுன்னு உங்களுக்குச் சொல்லத்தான் இதன எழுதுறேனுங்க. எங்களப் போல சின்ன மனுசன்களுக்கு மோசமானதவிடவும் கொஞ்சம் சிலாக்கியமா எதாவது செய்யிறதுன்னா அது உங்க மனசு எளகுறதுல தங்கியிருக்கு. இது ஒரு விண்ணப்பம் மாதிரி தொனிக்கிறதும் எனக்கு விருப்பமில்லை. ஆனா சில விசயங்கள் என் மனசக் குடையுது. நெல் சாகுபடியில காணப்படும் மோசமான நெலம இப்போ இன்னும் படுமோசமாப்போச்சு.

நெலம மோசமானா முறையிடுங்கோ, புகார் செய்யுங்கோன்னு நீங்க அடிக்கடி சொல்லுவீங்க. இங்க நான் யாரிடங்க புகார் செய்யுறது, பொலிசிடமா? அவங்க, போய் புரூனட் கிட்ட சொல்லு. நெல் சபயில அவருதான் பெரிய மனுசன்னுறாங்க. புரூனட் ஐயாட ஆபிஸ் எப்பவும் அடச்சிதான் இருக்கும். அவரு உள்ள இருக்கிறாரா வெளிய இருக்கிறாராங்கறது தெரியாது.ஆபீஸ்ல போய் மொய்க்கக்குற கூட்டத்தை பார்த்தா புரூனட் ஐயா தன்னப் பாதுகாத்துக் கொள்றதுக்கு அவருக்கு உரிமயுண்டுன்னுதான் தோணும். ரேடியோவுக்கு முறயிடவா? தோழர் பிரதமர் அவர்களே,இத செய்யுறது எப்படி? என் ரேடியோ பேசுமேயொழிய என் பேச்சக் கேட்காது. பேப்பருக்கு எழுதுறதா? பேப்பரோட தொடர்புள்ளவங்க எனக்கு தெரிஞ்ச ஒரே ஆள், அதக் கொண்டு வர்ற சின்னப்பொடியன்தான். அவன் நடந்துக்கொள்றதப்பார்த்தா அவன்ட ஒரு கால் இப்பவே பெர்சில்லன்னுதான் சொல்லனும்.

தோழர் பிரதமர் அவர்களே, உங்களுக்கு என்னத்தெரியாது. எனக்கு உங்களத் தெரியும். என் புள்ளகள்ட கொப்பிப் பொஸ்தகத்துல உங்க படம் இருக்கிறத நான் பார்க்கிறன். எனக்கு யாரத் தெரியும் என்பதல்ல, யாருக்கு என்னத் தெரியுங்கறது தான் முக்கியம்கிற வாசகம், எனக்கும் பிடித்தமானது.

இனி, தோழர் பிரதமர் அவர்களே, ஏன்ட நெலம மிகவும் மோசமுங்க ஐயா. அப்பாட அம்மாட, ஏன்ட தொப்புள் கொடியெல்லாம் புதைக்கப்பட்டிருப்பது இந்த கயானா மண்ல தான். நாங்க மண்ணின் மைந்தருங்க. நாங்களெல்லாம் உழைக்கிறது மண்ணில.வெவரமறிஞ்ச நாளில இருந்து இதுதாங்க எங்க தொழில். நானொரு விவசாயீங்க. என் ஊரு எசெக்குய்போ கோஸ்டு. சமீபத்தில நான் பல பிழைகள செஞ்சிட்டேங்க. நான் செஞ்ச முதல் பிழ, பதினஞ்சு ஏக்கர் நிலத்துல நெல் விதைச்சது தானுங்க. நெசந்தானையா என்னை போல பரதேசிக்கு இது அளவுக்கு மிச்சம். ஆனால் தோழர் பிரதமர் அவர்களே, கடினமா உழைக்கலேன்னா பொஞ்சாதி புள்ளைங்க ரோட்டுல எறங்க நேர்ந்துடும். பிச்ச எடுக்க நேர்ந்துடும். நெற்செய்கைல ஈடுப்பட்டுள்ள எனக்குள்ள பெரும்பிரச்சினைங்க இது. பாடுபட்டு உழைக்கிற விவசாயி நானுங்க. அரசாங்கத்தோட கொள்கையை ஆதரிக்கிறவனு நானுங்க. குடும்பத்துக்கு சோறுபோட உழைக்கிறேனுங்க. நான் வெதச்சது "N" வகை நெல்லு. இது நான் விட்ட இரண்டாவது பிழைங்க.

தோழர் பிரதமர் அவர்களே, "N" பற்றி அறிஞ்சிருக்கமாட்டீங்க. நீங்க எப்பவும் விமானத்துல வாரவங்க. ஆகாசத்துல இருந்து பார்த்தா எல்லா வகப் பயிரும் ஒரேவிதமாகத்தான் தோணும். அப்புறம் அமைச்சுக்கு சொந்தமான வாகனத்துல வேகமாக போவிங்க. வீதி அல்லோலக்கல்லோலப்படும். ரெண்டு வார்த்தைகள் உங்கள் வாயிலிருந்து உதிரும். நாங்களெல்லாம் கனவுலகுல மிதப்போம். பெரிய சக்கரங்கள போன்றவங்களோடுதான் உங்க பேச்சு. அவங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழலவைக்கும் சிறுபல்லுகளப்பத்தி அவங்களுக்கு எது வித உணர்ச்சியும் கிடையாது. வீதியில செவந்த வண்டல் மண்ணப்போட்டு குழிகள நிரப்புவாங்க. உங்க லாண்ட் ரோவர் அதன் மீது துள்ளிச்செல்லும். லொறிகள் எல்லாம் பிரேக்டவுன் ஆவது, எக்ஸல் உடைவது பற்றியெல்லாம் உங்களுக்கு சந்தேகங்கூட எழாது. நாங்க வாழுறது குழியில. எல்லாம் நல்லபடியா இருக்குதுன்னு அவங்க சொல்லுவாங்க. நீங்க போயிடுவீங்க. ஆனா, புரூனட் ஐயாவிடங் கேட்டு பாருங்க. புளுகு மூட்டைய அவிழ்க்க விருப்பமில்லைன்னா அவரு உண்மய சொல்லக்கூடும். 'N' தான் எல்லாத் துன்பத்தையும் தருதா "N" எடத்த அடச்சிக்கொள்ளுது. ஆலயால அதன அப்புறப்படுத்தமுடியல்ல.

தோழர் பிரதமர் அவர்களே, "N" பற்றி நீங்க தெரிஞ்சிருப்பீங்க. இது கலப்பு இனம். நெற்சப இதனயே விதைக்கச் சொல்லி வற்புறுத்துது. சரிதாங்க. ஆனா, இதுல பல குறைகள் இருக்குதுங்க. ஒன்னு விளச்சல் அளவுக்கு மிச்சங்க. எவ்வளவு அமோகம்னா, நிலம் திருந்தாட்டி பாவம் விவசாயிங்கள்லாம் பிச்சைக்காரராயிடுவாங்க.

முதல்ல கதிர் முற்றிப் பழுத்ததும் (நான் சொல்றது அறுவடையப்பத்தி, விதைப்பப் பத்திப் பேச சொல்லாதிங்க, அது வேற விசயங்க) கதிர் முற்றி பழுத்ததும் ஜி.ஆர்.பி.யில் அறுவடையந்திரத்துக்காகப் பெயரப் பதிவு செய்யனுமுங்க. அப்புறம் ஒவ்வொருநாளும் புரூனட் ஐயாட வாசல்ல போய் காக்கவேண்டியதுதான். இன்னக்கின்னுவாங்க; பொறகு நாளைக்கின்னுவாங்க; இன்னக்கி நாளைக்கி என்கிறதெல்லாம் அர்த்தமில்லாம போனதும் கடைசியில நேரமில்லேன்னுவாங்க; யந்திரத்த ஒட்டுறதற்கு ஆப்பரேட்டர் இல்லேன்னுவாங்க; யந்திரத்துக்கு உதிரிப்பாகங்கள் இல்லேன்னுவாங்க; மெக்கானிக் இல்லேன்னுவாங்க; இப்படியே ரெண்டு மூனு வாரங்கள ஒட்டியதும் வேல செய்யக்கூடிய யந்திரம் இல்லையேன்னு சொல்லிடுவாங்க. போய் புல்லுக்கத்தியால அறு என்பாங்க.

புல்லுக்கத்தி. அம்மாடியோவ் அது இன்னொரு கதை. முதல்ல அது லேசில கிடைக்காது. கிடைச்சிருச்சின்னா அத இயக்க கைகளால ஏலாதுங்க. "N" ரொம்ப குட்டையானது. முன்னால பின்னால சாயுமுங்க. அதுகளுக்கும் உணர்ச்சியுண்டு தானுங்களே. இதுக்குள்ள "N" பெரும்பாலும் நிலத்துல சாஞ்சிப்படுத்துறும்: கதிர்களத்தாங்க கூடிய சக்தி அதன் தண்டுக்கு கிடையாது: அவ்வளவு நோஞ்சானுங்க. இனி நல்லா இருண்டுறும் ராவாயிடும்.இனி நான் கிழக்க பார்த்து நிண்டு கும்பிடவேண்டியதுதான். "கர்த்தரே மழபெய்யாம இருக்கணும். இல்லாட்டி என் உழைப்பெல்லாம் மண்ணாப்போயிடும்".

இப்ப எல்லாம் நெல்லறுப்பதற்கு "நாய் தின்னுற" உபாயத்தைக் கையாண்டு நான் சமாளிச்சுக்கொள்றேனுங்க. "N" விளைச்சல்னா விளைச்சல்தானுங்க. ஒரு ஏக்கருக்கு முப்பது சாக்குக்கு அதிகம் தேறுமுங்க. கடவுளுக்கு நன்றி சொல்லனுமுங்க. ஆனா, அப்ப இருந்து தொடங்குற கவலைகள நெனச்சிப் பார்த்தா..... "கர்த்தரே உமக்கு நல்லா தெரிஞ்சிருக்கும். நானொரு பஞ்சப்பனாதி. தாழ்மையாயும் பணிவாயும் இருக்கத் தெரிஞ்சவன். ஆனா என் முன்னால இருக்கிற மத்தவங்க பிச்சையெடுக்காத போது, சனங்க காலில விழாதபோது, பணக்காரங்க கிட்ட ஏச்சு, உத வாங்காதபோது, .......... இதுக்கு வார்த்தையேதும் இருக்கோன்னு தெரியல.இருந்திச்சின்னா இதுவரைக்கும் அந்த வார்த்தை இங்க வந்து சேரல.

'போக்குவரத்து" என்பது ரொம்பப் பெரிய வார்த்தைங்க. என்னப்போல சிறு விவசாயிங்களுக்கு அதுக்குப் பெரிய அர்த்தமுங்க. இந்த நெல்லையெல்லாம் நான் எப்படி மில்லுக்கு கொண்டுச் செல்றதுன்னு அர்த்தங்க. லொறிவச்சிருக்கிற பணக்காரங்களுக்கு நேரமில்ல. பணக்காரன்ட நெல்லைதான் அவங்க கொண்டுபோவாங்க. அரசாங்கத்துக்கு மணலும், வண்டல் மண்ணும் இழுப்பாங்க. காசு இருக்குதுன்னா கொண்டு போறோம்பாங்க. ஒரு சாக்குக்கு ஒரு டொலர். உபசாரம் வேறு. ஜி.ஆர்.பி.யில கழிக்கிற தொகையும் அதோட சேர்க்கணும். உபாசாரம்னா கோழிப்பொரியல், சாராயம். எல்லாம் கூட்டிப்பார்த்தா இன்னொரு டொலர். தோழர் பிரதமர் அவர்களே, என்னக் காப்பாத்துங்கய்யா. நான் கழுத்தளவு மூழ்கிப்போனேனுங்க. முதல்ல அரசாங்கம் அரிசியிலிருந்து மானியத்த எடுத்துக்கொள்ளும். அது பெரிய வார்த்தைங்க. அதுக்கு என்ன அர்த்தமுன்னு எனக்கு தெரியாதுங்கய்யா. ஆனா அரிசி விலை ரெட்டிப்பாகுறது தெரியுமுங்க. தனியார் யந்திரத்தின் அறுவடைக்கூலி உயருமுங்க. உழவு யந்திரக்கூலி உயருமுங்க. வேலைக்காரங்க கூலி உயருமுங்க. லஞ்சத்தொகையும் அதிகரிச்சிடுங்க. உரப்பசள விலையேறிப் போச்சுன்னு சொல்லுறாங்க. இப்ப என்னடான்னா லொறிக்கூலி. தோழர் பிரதமர் அவர்களே, இதப்போல நெல்லு விலையேறுற நோக்கமில்லீங்களா? இப்படியிருக்கும் போது இந்த பொருளாதார நெருக்கடியில ஒரு லோட் ஏத்துறக்கு உபசாரம் பண்றதுக்கு அரசாங்க ரேட்'ல லொறி பிடிக்கிறதுக்கு நூறு டொலர் வேணுமுங்களே, இத நான் எங்க போய் தேடுறதுன்னு சொல்லுங்கய்யா. லொறி சொந்தக்காரன் என்னவெல்லாமோ சொல்றானே. அரசாங்க லைசன்சு கட்டணம் கூடிருச்சுதாம். பாதை மோசமாப் போச்சுதாம். உதிரிப்பாகங்கள் பெற முடியல்லியாம். ஜி.ஆர்.பி.யில போய் பகலிரவா லைன்ல நிக்கணுமாம். அரசாங்க ரேட்'ல ஒரு லோட் இழுத்து கட்டுப்படியாகாதுங்கறாங்க. மணலும் வண்டலும் ஏத்தினா அதிகம் சம்பாதிக்கலாமுங்கறாங்க. ஆனால், லைன்ல நிக்கிறதுதான் அவங்களுக்கு வேண்டாமுன்னு போகுது. அவுங்க சொல்லுறது சரிதாங்க. ஒரு டிரெய்லருக்காக தினமும் போய் புரூனட் ஐயாட ஆபீஸ்ல காத்துகிடக்கிறேனுங்க.

முதல்ல புரூனட் ஐயா அவங்களிட்ட டிரெய்லர் இல்லேங்குறாரு. அப்புறம் போய் பார்க்கின்சன் ஐயாக்கிட்ட பேசுன்னுறாரு. பார்க்கின்சன் ஐயா டிஸ்திரிக் மனேஜரிட்ட போன்னுறாரு. டிஸ்திரிக் மனேஜர் திரும்பவும் புரூனட் ஐயாகிட்ட அனுப்பிவைக்கிறாரு. எப்பவும் அவுங்கல்லாம் பெரிய சில்லுங்க. அதுகளுக்கு 'கிரீஸ்" போட பண வசதி இல்லீங்க. எனவே கூழக்கும்பிடு போடனுமுங்க. ஏச்சு பேச்சுகள எல்லாம் வாங்கிக்கட்டிக்கணுமுங்க. கடைசியா ஒரு கத்து கத்துவாங்க. டிரெய்லர் இருக்கு:அத இழுத்துக்கினு போக டிராக்டர் கொண்டுவா.

பாவம், மனுசன் செத்துப்போவானுங்க. பொஞ்சாதி போய் பணக்காரங்களுக்கு அடிமையா உழைக்கறதையும் புள்ளங்க அம்மணமா பிச்சை எடுத்து திரியுறதையும் கண்ணால பார்க்க நேரிடுமுங்க. போய் நான்டு கொண்டு சாகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுமுங்க. இல்லேனா களை நாசினிய குடிக்கச் சொல்லுமுங்க. இதத்தாங்க ஏலாதுங்க ஐயா. நெல்லைக் கொண்டு போறதுக்கு ஒரு டிராக்டர் வாடகைக்கமர்த்த உங்களுக்கும் அவங்களுக்குமிடையில் ஐக்கியமில்லேங்க. உங்களுக்குள்ள ஒரே எலியோட்டப் பந்தயம் தானுங்களே. உங்க ஒவ்வொருத்தருக்கும் உங்க நெல்லு அவசரமாப் போகணும். பணக்காரனுக்கு தானுங்க டிரெய்லர் கிடைக்கும். அவனிடம் தானுங்க இழுத்துக்கினு போக டிராக்டர் இருக்கி. அவன்ட நெல்லு நேத்து ராவுதான் அறுபட்டிருக்குமுங்க. என்னோட நெல்லு ரெண்டு வாரமா கோணிசாக்கில தூங்கிக்கினு இருக்குமுங்க. இன்னும் ரெண்டு மூனு வாரத்தில வெயிலில பரப்பல்லேனா அது உலுத்துப் போகுமய்யா.

இனி நான் தனியார்ட மில்லுக்குத்தான் போவனும். ஏலவே நான் மொக்கு குளஞ்சிட்டன். மில் முதலாளி ஆபிசுல ஹாய்யா உக்கார்ந்துக்கினு நெல்காயப் போடுற பெண்கள ரசிச்சிக்கிட்டு இருப்பாரு. காத்துல பாவாட ஒசரும் போது ஜோரா இருக்குமுங்க. நா வர்றத கண்டதா ஐயா காட்டிக்கொள்ள மாட்டாரு. ஆனா நான் வருவேன்னு எதிர்ப்பார்த்துதான் இருந்திருக்காரு. என்விட்டு நிலம மோசமுன்னு அவருக்கு நல்லா தெரியும். இந்த சந்தர்ப்பத்தைதான் அவரு எதிர்பார்த்து இருந்திருக்காரு. என் சின்னப் பய ரேக்கையால் நெல்லை இழுத்துக்கினு இருப்பதத் தாண்டி போறேன். அவன் 'அப்பா" என்கிறான். அவனப்பார்க்க எனக்கு வெக்கமா இருக்கு. பாடசாலைக்கு போகவேணாமுன்னு அவன நிப்பாட்டினவன் நான்தானுங்களே. அவன்ட பன்னாம்பழசுத் தொப்பியில சூரியன் நெருப்பா தகிக்கிறான். கொங்கிரீட் தர அவன் கால்கள தவ்வாவாய் பொசுக்குது. எனக்கு வெக்கமா இருக்கி. பதிமூனு வயசுப்பொடியன் முப்பது வயசு ஆம்பள மாதிரி கஷ்டப்படுறானே.வாங்கறதோ சின்னபய சம்பளம்.

மில் முதலாளி பல்லைக்காட்டிட்டு என்னச் சீண்டிப் பாக்கிறாரு: நெல்ல அறுத்து எவ்வளவு நாளாச்சுது. இது புடைச்ச நெல்லுதானா?. நான் உகும்பி போறேன். அவரு மவுசு காட்டுறாரு. களஞ்சியம் நெறஞ்சிடுச்சாம். "N" நெல்லு தேவையில்லியாம். "N" க்கு அரசாங்கம் நியாய விலை தருகுதில்லியாம். மோசமான நெல்ல அவரால வாங்க முடியாதாம். நெல்மூட்டையால என்ன மொத்தின மாதிரியிருந்ததுங்க. நான் விழுந்திட்டேனுங்க. அடுத்த தாக்குதலுக்கு அவர் ஆயத்தமாகுறாரு. இப்போ விலய பத்தி பேசுறாரு. என் கால்கள் நடுங்குதுங்க. அழ வேணும் போல தோணுதுங்க. கதவு வழியா சின்னப்பய பார்த்துடுவான். என் கையில இருக்கிற நெல்ல எடுத்துக்க சொல்லி நான் மொதலாளிக்கிட்ட கெஞ்சுறேன்.


அவர் மில்ல சுத்திப்பார்க்கப் போயிடறாரு. வாகனத்துல எஸ்டேட்ட சுத்தப் போறாரு. பகல் சாப்பாட்டுக்கு ஒரு மணிநேரம் எடுக்கிறாரு. சாப்பாட்டுக்கு பின் நித்திரை போடுறாரு. பின்னேரம் தான் மீண்டும் அவர்ட கண்ணுல படறேனுங்க. மனுசன் சரி லொறி அனுப்பறேன்னுட்டாரு. நான் ஆபிசவிட்டு வெளியேறும் போது லொறி கூலி பத்தியும் சாடையா சொல்லிடறாரு.

மவராசனாயிருக்கனும். மொதலாளிதானுங்களே இன்னமும் எனக்கு ஆபத்பாந்தவன், நான் வீட்டுக்குப்போய் விஷயத்தச் சொல்லுறேன். எல்லோருக்கும் கொண்டாட்டம். கிருஸ்துமஸ் வருகுதில்லீங்களா. எல்லார் முகத்திலயும் புன்னக அரும்புது. ஆனா அடுத்த போகம் வரும்வரைக்கும் என் மகளுக்கு காது தோடு வாங்க ஏலாதுங்க?. என் மகனுக்கு டிரக்பூட்ஸ் வாங்கி தாரதா உறுதியளிச்சேனுங்க. அதுவும் அவ்வளவுதான். மகனே நீ வெறும் காலால ஓடியே ஓட்டப்பந்தயத்துல எல்லோரையும் ஜெயிச்சிடுவே எனக்கு தெரியும். கிருஸ்துமஸுக்கு வீட்டுல புது திரைசீலை தொங்கனும்னா என் பொஞ்சாதி உழைச்சித்தான் ஆகணும்.என்கிட்ட ஒருத்தரும் ஏனுன்னு கேட்க வேணாம். கடைகள்ல சாமான்கள்லாம் விலை ஏறிருச்சி. ஆடம்பர பொருள்களையெல்லாம் அரசாங்கம் தடை பண்ணிருச்சி. நீங்கள்லாம் வயலில பாடுபடறது எனக்கு தெரியாதுன்னு நெனக்கிறீங்களா. சரி நெல்லறுக்கும் போது பார்த்துக்குவோம். நிச்சயமா அடுத்த அறுவடையில பார்த்துக்குவோம். சரியா?.

தோழர் பிரதமர் அவர்களே,இவ்வளவு பச்சயா படம் பிடிச்சுக் காட்டுனதுக்கு வருத்தமய்யா. நீங்க புரிஞ்சு கொள்ளுவீங்கன்னு நினைக்கிறேனுங்க. எப்படியாவது உதவி செய்ய முயற்சியுங்க ஐயா.

உங்கள் மரியாதைக்குரிய,

*நெல்விவசாயி.*



தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பணியினைப் பாராட்டி, இந்து சமய கலாச்சார அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால், இவ்வாண்டு தமிழ்சாகித்திய விழாவில் "தமிழ் ஒளி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட பண்ணாமத்து கவிராயர் கால்நூற்றாண்டுக்கும் மேலாக எழுதிவருகிறார். அறுபதுகளில் எழுதத் தொடங்கிய இவரை "தாரகை" என்ற முஸ்லிம் பத்திரிகை "அங்தக சுவைவாய்ந்த கவிதைகள் எழுதக் கைவந்தவர்"என அறிமுகப்படுத்திற்று. அன்றுதொட்டு மணிக்குரல், தேசாபிமானி, செய்தி, இன்ஸான், அஷ்ஷுரா, தினகரன், விரகேசரி, திசை முதலிய பத்திரிகைகளிலும் மல்லிகை, மலர்,பாவை முதலிய சஞ்சிகைகளிலும் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன.

இவர் சில சிறுகதைகளும் எழுதியுள்ளார். இவரது "மெயில் பஸ் தம்பதி" என்ற சிறுகதை "அலை"யில் வெளியாயிற்று. மாத்தளை வடிவேலனின் "புத்தாண்டு புதிதல்ல" என்ற சிறுகதை இவரது ஆங்கில மொழிபெயர்ப்பாக VOICE OF THE VOICELESS என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. இவரது ஆங்கில கவிதைகள் மூன்று THE HILTONIAN என்ற அமெரிக்க சஞ்சிகையில் பிரசுரமாயின.

மலையகத்தின் வடக்கு நுழைவாயிலான மாத்தளையைப் பிறப்பிடமாக கொண்ட பண்ணாமத்துக்கவிராயரின் சொந்தப் பெயர் ஸய்யத் முஹம்மத் ஃபாருக் இவர் ஓர் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்."பாடல்களின் பாடல்" என்ற பண்ணாமத்துக்கவிராயரின் கவிதைதொகுதி அண்மையில் வெளிவரவுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமன் கூத்து

## மலையக மக்களின் சமூக வாழ்க்கையில் அதன் பங்கு.

**-மாத்தளை வடிவேலன்-**

காமனைத் தெய்வமாக வழிபடும் மரபு தொன்மையானது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியை காமவேள் கோட்டம் சென்று வழிபடுமாறு கூறியதாக கதை உண்டு. சுரமஞ்சரி என்பவள் சீவகனே கணவனாக வரவேண்டும் என்று காமனை வழிப்பட்டதாக சீவகசிந்தாமணி கூறுகின்றது. நாச்சியார் திருமொழியில் காமன்பண்டிகையில் கொண்டாடப்படும் மாதும், தினம் என்பன கூறப்பட்டுள்ளதை காணலாம். காமன்பண்டிகை வட இந்தியாவில் "ஹோலிப்பண்டிகை" என கொண்டாடப்படுகின்றது. கிரேக்கரும் உரோமரும் மன்மதனை வழிப்பட்டு வந்துள்ளனர். திருவிளையாடல் புராணத்தில் சிவனால் அணங்கவேள் எரியுண்டு பின் உயிர்ப்பிக்கப்பட்டு ரதிதேவியின் கண்களுக்கு மட்டுமே தோற்றும் அரூபனாகின்றான். அன்பின் வடிவமும் அதுவேயாகும்.

கந்தபுராணத்தில் காம தகனப் படலத்தில் சிவபெருமானின் யோக நிலையை அகற்ற சென்ற மன்மதன் சிவன் மீது மலர்கணை தொடுத்து, அவர் நெற்றிக்கண்ணினின்று தோன்றிய அக்கினியால் எரியுண்ட வரலாறு விரிவாக கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சமய இலக்கிய ஏடுகளில் சிறப்பாக எடுத்துக்கூறப்பட்டுள்ள அணங்கவேளின் கதையை இந்துக்களான மலையக மக்கள் தம் வாழ்வோடு இணைத்துக்கொண்டது வியப்பில்லை.

மலையகத்தில் கோப்பி, தேயிலை தோட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னரே மலைநாட்டில் தமிழ் மக்கள் செல்வாக்குடன் வாழ்ந்திருந்த போதிலும் அக்காலத்தை ஒட்டிய சுவரோவியங்கள், சிற்பங்கள், கட்டிடக்கலைகள் போன்ற அம்சங்களிலும் நடனங்களிலும் பதிந்து விட்ட சில முத்திரைகளையே அன்றி இம்மாதிரியான தனித்துவமான பாரம்பரிய கலைகளைக் காணக் கூடியதாக இல்லை. ஆனால் தென்னிந்திய தமிழ் தோட்டத் தொழிலாளரின் குடியேற்றத்திற்கு பின்னர் தப்பு, உருமி முதலிய தனித்துவமான இசை மரபுகள் செல்வாக்குடன் வழக்கில் வந்ததுடன் பொன்னர் சங்கர் கூத்து, அருச்சுனன் தபசு,காமன்கூத்து போன்ற காவியக் கதைகளை உள்ளடக்கிய கூத்துகளும், கூத்து அந்தஸ்தினை பெறாத கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம் முதலான சிற்றாட்ட வகைகளும் ஆற்றுகைக் கலைகளாக இடம்பெற்றன.

மலையகத்தில் குடியேறியோர் விவசாய தொழிலாளர் உட்பட ஏனைய தாழ்ந்த சாதியினர் என குறிப்பிடப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தோரே அதிகமானோர் ஆவர். இவர்களில் பெரும்பான்மையானோர் தென்னிந்திய சமூக அமைப்பின் அடித்தளமக்களாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவராகவும் இருந்தனர். இவ்வகையில் இங்கு நிலை பெற்றது கிராமிய பாரம்பரியத்தை சேர்ந்த தொல்சீர் கலைகளேயாகும். தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த மக்கள் இங்கு ஒரு தோட்டத்தில் ஒன்றிணைந்து தம் பாரம்பரிய கலைகளை செய்தொழில் சூழலுக்கேற்ப மேற்கொண்டபோது அவ்வாற்றுகை கலைகளின் பொதுத் தன்மை மாறுபடாமல் புது மெருகூட்டப் படலாயிற்று.

> காமன் கூத்து ஒரு கலைக்கூத்தா? அல்லது மலையக மக்களால் மேற்கொள்ளப்படும் பக்தி சிரத்தையோடு நெறிமுறைகளோடு மேற்கொள்ளப்படும் ஒரு சமயச்சடங்கா?

மலையகத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக குடியேறிய தென்னிந்திய தமிழ் மக்கள் தம் பாரம்பரிய தெய்வவழிபாடு, சடங்குகள், சம்பிரதாயங்கள், பரம்பரை பழக்க வழக்கங்கள், கலாச்சார இசை நடன மரபுகள் என்பனவற்றையெல்லாம் இங்கு வேரூன்றச் செய்தனர். மலையக கலைகலாச்சார அம்சங்கள் தென்னிந்திய கலைகலாச்சார அம்சங்களின் தொடர்ச்சியானதாகவே காணப்படுகின்றன.

மலையகத்தில் பெரும்பாலான தோட்டங்களில் ஆடப்படுவதும் பிரசித்தமானதும் இன்றும் பெரும் வாரியாக வழக்கிலுள்ளதும் காமன் கூத்தாகும். மலையக மக்களின் கலைகள் தெய்வவழிபாட்டுடன் இணைந்ததாகவும் கடவுள் பக்தியையே அடிநாதமாகக் கொண்டதாகவும் விளங்குவதோடு சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் என்பவற்றின் அடியொட்டி எழுந்த ஆலயங்களை மையமாக வைத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. சமய வழிபாட்டினை வலியுறுத்தி அதேவேளையில் வாழ்க்கையினை அச்சமயத்தின் அடியொட்டி வழிநடத்திச் செல்லும் இக்கூத்துக்களை முறையாக ஆடி அனுசரிப்பின் அது தம்மை ஈடேற்றும் என்ற நம்பிக்கையை கொண்டவர்கள். இவற்றை வெறும் கலைக்கூத்தாக, பொழுது போக்கு அம்சமாக நினைப்பவர்கள் அல்ல மலையகமக்கள். தம்வாழ்வில் ஒரு பகுதியாவும் சமயக்கடமையாகவும் நினைத்து நிறைவேற்றுகின்றனர். தீராத நோயொன்றினால் பிடித்து துன்புறும் ஒவ்வொருவரும் இக்கூத்துக்களில் ஒரு பாத்திரமேற்று ஆடுவதாக நேர்த்தி வைத்து அதனை நிறைவேற்றுகின்றனர்.

இவ்வாறு, மலையக மக்கள் வாழ்க்கையோடு இணைந்த ஒரு கூத்துதான் காமன்கூத்து. காமன்கூத்தை வருடந்தோறும் தம் தோட்டத்தில் சிறப்பாக நடத்தினால் தோட்ட மக்களுடைய வாழ்வு சிறக்கும் என்ற நம்பிக்கை தோட்டப்புற மக்களிடையே மேலோங்கியுள்ளது அத்துடன் கன்னியர், காளையர் தாம் விரும்பியோரை அடைவதுடன் மேலான இல்லற வாழ்வினை பெற்று சற்புத்திரர்களையும் அடையமுடியும் என்ற நம்பிக்கையையும் கொண்டுள்ளனர்.

மலையக தோட்டங்களில் காமன்கூத்து அல்லது காமண்டி "கம்பம் ஊன்றுதல்" அல்லது "கம்பம் நடுதல்" என்னும் நிகழ்வோடு ஆரம்பமாகின்றது. மாசி மாதம் அமாவாசை கழித்து மூன்றாம் பிறை நாளில் " காமண்டி வாத்தியார்" தலைமையில் காமன்கூத்தில் பங்கு பற்றுவோரும் ஏனையோரும் ஆற்றங்கரை அல்லது தோட்டத்திலுள்ள பீலிக்கரை முதலான நீர்நிலைக்குச் செல்வர். அங்கு கம்பம் பாலித்தல் என்னும் சடங்குடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். பேய்க்கரும்பு கொட்டமுத்து, செங்கரும்பு துவரை, மூங்கில் குருத்து ஆகியவற்றை ஒரு கட்டாக கட்டி இவற்றின் இலைகளையும் இக்கட்டுடன் சேர்த்து வைக்கோலை கயிறுபோல் திரித்து கட்டாகக்கட்டி சேர்த்து கம்பத்திற்கு மேலாக சுற்றி பூசை செய்து பக்திபிரவாகத்துடன் ஊர்வலமாக க்கொண்டு வருவர். இதனை "குடி அழைத்துக் கொண்டு வருதல் " என்றும் கூறுவர். தப்பு வாத்தியம் முழங்க அனைவரும் குளித்து ஈர உடுப்புடன் வரும்போது பக்தி சிரத்தையினை வெளிக்காட்டும் காட்சியாக இது அமையும்.

இவ்வாறு கொண்டுவந்த கம்பத்தை வழமையாக நடும் காமன் பொட்டலில் நடுவர். இவ்வாறு கம்பம் நடும் இடமே காமன் கோயிலெனக்கணிக்கப்படும். காமன்கம்பத்தை நடுவதற்கு முன்னர் சென்றவருடம் மூடிய பழைய குழியை தோண்டுவர். அதில் இட்ட வெள்ளிக் காசுகளை மட்டும் எடுத்துக்கொண்டு பழையபடியே அட்சரத்தகடு, தங்கம், பிடிமண் என்பவற்றையும் காமன் வாத்தியார் வசமுள்ள பிடிமண் என்பவற்றையும் போட்டு கம்பத்தை நடுவர். பின்னர் கம்பத்திற்கு பால் ஊற்றப்படும். குழியிலிருந்து பெறப்பட்ட நாணயங்களை வைத்திருந்தால் நோய் நொடி தீரும் என்ற நம்பிக்கையுண்டு. காமன் கம்பம் ஊன்றும் போது குழியினுள் இடப்படும் "பிடிமண்" பரம்பரையாக காமன் ஊன்றி ஊன்றி எரித்த இடத்திலிருந்து பெறப்பட்டதாகும். பழமை வாய்ந்த பிடிமண்ணே சக்தி வாய்ந்ததாகும். மன்மதன் அருள் அதற்கு அதிகமாக உண்டு என்ற நம்பிக்கையே இதற்கு காரணம்.

இந்துசமய வைபவங்களில் விநாயகரை முதலில் வழிபடுவது மரபு. இங்கும் இது கடைபிடிக்கப்படுகின்றது. காமன்கம்பம் நடுவதற்கு முன்னர் பிள்ளையாரை துதித்து பாடிப்பணிவர்.

அகன்ற மாசி மாதம்
விளங்கும் பௌர்ணமியில்
அமாவாசை கழிந்த மூன்றாம்பிறையில்
அங்குசனை உருவாக்கி
இங்குதன் பிறை நோக்கி
அருள் புரிய வேணுமையா
ஆனைமுகப் பிள்ளையாரே -

என்று காமன் வாத்தியார் பாட விநாயகர் பூசை நடைபெறும். காமன் கம்பத்தில் காதோலை, கருகுமணி ஆகிய பொருட்களும் வைக்கப்படுவதுடன் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியும் பொருத்தப்படுகின்றது. கம்பத்தை சுற்றி ஐந்து அல்லது மூன்று தளமேடை அமைக்கப்பட்டு சாணத்தினால் மெழுக்கப்படுகின்றது. இதற்கு மேலே மூன்று அல்லது ஐந்து சிறு விளக்குகள் ஏற்றப்படுகின்றன. கோவிலில் அல்லது சுபகருமங்களில் ஒற்றைப்பட்ட எண்ணிக்கையில் கருமமாற்றுவது ஒரு மரபாகும். இம்மரபு இங்கும் போற்றப்படுகின்றது. அத்துடன் கம்பத்திற்கு முன்பக்கமாக நவதானியம் வளர்க்கப்படுகின்றது. சரஸ்வதி பூசை முதலான சமயபணிகள் நடைபெறும் போது நவதானியம் வளர்க்கப்படுவதைப் போல் இங்கும் இது மேற்கொள்ளப் படுகின்றது. நவதானியம் வளர்த்தல் போன்ற மங்களகரமான கிரியைகளை காமன்கூத்து போன்ற கலைக் கூத்துகளிலும் மேற்கொண்டு மலையக மக்கள் தம் பக்தி உணர்வை வெளிகாட்டுகின்றனர்.

இக்கூத்தில் பங்குகொள்வோர் காப்புகட்டி நோன்பிருப்பர். பால், பழம் முதலியவற்றுடன் சைவ உணவுகளையே உண்பர். சில தோட்டங்களில் கூத்துகளில் பங்கு கொள்வோர் மட்டுமன்றி சிறுவர்கள் முதல் பெரியோர் வரை நோன்பிருப்பது முண்டு. கணவன் வேடம் புனைந்தால் மனைவி நோன்பிருப்பதும் உண்டு. அதேபோல் பிள்ளைகள் ரதி மதன் முதலான பாத்திரங்களை ஏற்கும் பட்சத்தில் தாய்தந்தையரும் உண்ணா நோன்பிருப்பர். கூத்தில் பங்கு பற்றும் ஆட்டக்காரர்கள் காப்புகட்டிய நாளிலிருந்து தம் வீடுகளுக்கு செல்வதில்லை. காமன் பொட்டலுக்கு சமீபமாக அமைக்கப்பட்ட பச்சை தென்னோலை குடில் அல்லது தனியான வீடு என்பவற்றிலேயே தங்குகின்றனர். இவ்வாறு இக்கூத்து ஒரு இன்பப் பொழுது போக்கு அல்ல. ஒரு சமய சடங்கே என்பதை ஒவ்வொரு அம்சத்திலும் வலியுறுத்துகின்றனர். இக்கூத்து மது, மாமிசம் என்பதை புசிப்பதை தவிர்த்து தொழிலாளர் மத்தியிலே மனக்கட்டுப்பாட்டினையும் ஒழுக்கத்தையும் வளர்க்க தூண்டுகோலாக அமைகின்றது.

ரதி, மதன், சிவபெருமான் உட்பட ஆட்டக்காரர்கள் அணியும் ஆபரணங்கள் பாரமற்ற முள்முருங்கை மரத்தினால் தயாரிக்கப்படுகின்றன. இம்மரங்களை தறித்து இவ்வாபரணங்களை செய்வது வளர்பிறையிலாகும். வளர்பிறையிலேயே சுபக்கருமங்களை செய்ய வேண்டும் என்ற நம்பிக்கையை இது வெளிப்படுத்துகின்றது. ரதிமதன் ஆட்டம் முதலில் காமன்பொட்டலிலும் பின்னர் லயன்கள் முதலான வீடுகளுக்கும் சென்று ஆடுவர். இவ்வாறு அவர்கள் ஆட ஒப்பாரி, லாவணி முதலிய பாடல்கள் பாடப்படும். காமன் வாத்தியார் முதலில் பாடல்களை பாட பின்னர் பின்பாட்டு காரர்கள் பாடுவர். தப்பு, ஜல் முதலிய வாத்தியக்கருவிகளை இதற்கு பயன் படுத்துகின்றனர். ஒப்பாரி பாடும்போது ரதி மதன் முன்னும் பின்னுமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியெடுத்து வைத்து ஆடுவர். லாவணி பாடும்போது வட்டவடிவமாக ஆடுவர். ரதிமதன் கையில் விபூதியை கொடுத்து "அறம் வைத்து ரதி மதனை பழிப்பது போலவும், மதன் ரதியை பழிப்பது போலவும்" பாடுவதால் ஆக்ரோஷத்துடன் அருள் வந்து குதிப்பர். அப்போது அவர் கையில் கொடுத்த விபூதியை பெற்றுக் கொள்வர். இவ்விபூதி நோய் தீர்க்கும் சக்தி மிக்கது எனக் கருதுவர். குறிப்பாக பிள்ளைப்பேறு இல்லாதோர் வாங்கி அணிந்து கொள்வர். இதனால் மகப்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டு.

ரதி மதனுக்கு தோழன், தோழி போன்று வெட்டியான், வெட்டிச்சி என்ற இருவர் இருப்பர். அத்துடன் தேர்வசந்தன், ஈஸ்வரன், நந்தீஸ்வரன், தூதுவன், நாரதர், அகோரவீரபுத்திரன், சித்திரபுத்திரன்,கோமாளி ஆகியோரும் முக்கிய பங்கு கொள்கின்றனர். இப்பாத்திரங்களை எந்த சாதிபிரிவினரும் ஏற்கலாம். சாதிப்பாகுபாடு காரணமாக ஒருவருக்கு எந்த பாத்திரமும் வழங்குவதற்கு தடையில்லை. உதாரணமாக சிவபெருமான் பாத்திர மேற்று நடிப்பவர் யாராக இருந்தாலும் அவருக்கு மேலான கௌரவத்தை அளிப்பர். இவ்வாறு காமன்கூத்து மலையக மக்கள் மத்தியில் நிலவும் சாதிப்பிரிவுகளுக்கு மேலாக எல்லோரும் சமமானவர்கள் என்ற நிலையை நடைமுறையில் கொண்டுள்ளது.

தற்காலத்தில் வெட்டியான் வெட்டிச்சி ஆட்டம் மிகவும் வரவேற்புக் குரியதாக விளங்குகின்றது. இதற்குக் காரணம் ரதிமதன் ஆட்டத்தை போலல்லாது இது நவீன ஆட்டவகையை சேர்ந்து விளங்குவதுடன் வெட்டியான் வெட்டிச்சி ஆட்டத்திற்காக பாடப்படும் பாடல்கள் மலையக மக்களின் அவல வாழ்க்கையையும் சமுதாய புன்மை களையும் குத்திக்காட்டும் மலையக நாட்டார் பாடல்களையும் உள்ளடக்கியதாக விளங்கும் பாடல்களே இதற்கு காரணம் எனலாம்."துரைத்தனம்" கங்காணிமார் கொடுமை, வேலைப்பளு, காதல் என்பவற்றையெல்லாம் வெட்டியான் வெட்டிச்சி பாடல்களில் புகுத்தி ஆடுவதால் மக்கள் மனம் கவர்ந்த தோட்டத்து சமூகத்தில் காணும் நடைமுறை பாத்திரங்களாக மிளிர்கின்றனர்.

த்ண்ணி கறுக்திருச்சி - குட்டி
தவளை சத்தம் கேட்டிருச்சி

என்ற வெட்டியான் பாடி ஆடும் போது இருட்டும் வரை வேலை செய்ய வேண்டிய துயரத்தையே வெட்டியான் தன் பாடலின் மூலம் வெளிப்படுத்துகின்றான். இவ்வாறு சமய ரீதியான ஒரு கூத்தில் காலத்திற்கேற்ப சில மாற்றங்கள் நிகழ்வதை இங்கு காணக்கூடியதாக உள்ளது.

காமன்கூத்தில் ரதி, மதன் திருமணமும் இறுதி நாளில் காமன் தகனமும் முக்கிய அம்சங்களாகும். ரதிதேவிக்கும் மதனுக்கும் சிறப்பாக திருமணம் நடத்தி வைப்பர். இதனால் நம் குடும்ப வாழ்விலும் இவ்வாறு சுபகாரியங்களும் எந்தவித இடையூறும் இன்றி நடக்கும் என நம்புகின்றனர். திருமணம் நடைபெறும் தினத்தன்றும் இறுதியாக காமத்தகனம் நடைபெறும் தினத்தன்றும் பெண்கள் மாவிளக்கு எடுத்து தம் நேர்த்திகடன்களை செலுத்துவர். பெண்கள் குரவையிட்டு மாவிளக்கு எடுத்து காமன்கம்பத்தை வந்தடைவர். ஊர்வலத்திற்கு முன்னே பெண்டிர் கும்மியடிப்பதும், ஆண்கள் சிலம்ப மாடியும் வருவர்.

இவ்வாறு கும்மி, கோலாட்டம், சிலம்பு, ஒயிலாட்டம், கரகாட்டம் முதலிய சிற்றாட்டங்கள் நடைபெறும் களமாகவும் சீர்கொண்டுவரும் ஊர்வலம் அமைகின்றது.

பதினாறாம் நாள் அல்லது முப்பதாம் நாள் நடைபெறும் காமத்தகனத்தில் இடம்பெறும் தூதுவன் ஆட்டமும் மற்றொரு குறிப்பிடத்தக்க ஆட்டமாகும். புஜத்திலும், கையிலும் எரியும் நூற்றுக்கணக்கான தீப்பந்தங்களுடன் ஒத்த தப்பு தாளத்திற்கு ஏற்ப தூதுவன் ஆடிவருவது மலையக மக்களின் வீரதீர செயல்களையும் அவர்களது அஞ்சா நெஞ்சத்தையும், சாகஸ செயல்களிலுள்ள ஈடுபாட்டையும், திறமையையும் காட்டுவதாக அமையும்

சில இடங்களில் இடம்பெறும் காமன் எரிந்தான், காமன் எரியவில்லை என்னும் எரிந்தகட்சி, எரியாதகட்சி வாக்குவாதம் தோட்டத்திலுள்ள காமன் வாத்தியார்களின் சமய அறிவையும் கவிப்புலமையையும் வித்துவச் செருக்கினையும் காட்டுவதாக அமையும்..

இவ்வாறு மலையகத்தில் ஆடப்படும் காமன்கூத்து புராணகாலத்து சமயக் கதையொன்றினை கருவாகக் கொண்டு மக்களை சமயநம்பிக்கைகளிலிருந்து வழுவவிடாது பக்தி உணர்வை ஏற்படுத்துவதுடன் கலாநயமிக்க ஒரு கூத்தாகவும் விளங்குகின்றது. காமன்கூத்து ஒரு கலைக்கூத்தா? அல்லது மலையக மக்களால் மேற்கொள்ளப்படும் பக்தி சிரத்தையோடு நெறிமுறைகளோடு மேற்கொள்ளப்படும் ஒரு சமயச்சடங்கா? என்ற வினாவை எழுப்பினால் இவை இரண்டும் ஒன்று கலந்த அதே வேளையில் ஒன்றுக்கொன்று முரண் படாத ஒன்று என்று கூறலாம்.

தோட்டம் ஒரு மூடிய சமூக அமைப்பினை கொண்டது என்று கூறின் அக்கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடியதே. இவ்வாறு மூடிய சமூக அமைப்பினை கொண்ட தோட்டத்தில் வாழும் மக்களது சமய ரீதியிலான ஒரு கூட்டு முயற்சியே காமன் கூத்தாகும்.

★ ★ ★

## ஹைகூ

✍ பாலரஞ்சனி சர்மா.

கும்மிருட்டுப் பாதையில்
வழி சொன்னது
மின்மினிக் கூட்டம்

✡✡✡

நீலம் பாரித்தும்
மரணிக்கவில்லையே
வானம்

✡✡✡

விடியலாய் உனை
நினைத்தாய்
விட்டிலையுமா கொன்றாய்
ஏ .....விளக்கே

✡✡✡

மாலை வானத்துள்
எப்படிப் புகுந்தது
மஞ்சள் நதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக நாட்டாரியல்

**— ஒரு கண்ணோட்டம் —**

**ச.மணிசேகரன்**

கொச்சை இலக்கியம் என ஒதுக்கப்பட்டு, அவமதிக்கப்பட்ட பாமரமக்களின் இலக்கியம் என ஏளனமாக நோக்கப்பட்ட கிராமியக் கலைகளின் ஒட்டுமொத்த வடிவத்திற்கு கிடைத்தை ஒரு கௌரவமே இம்முறை சாகித்திய விழாவின் கருப்பொருள் "நாட்டாரியல்" ஆகும்.

இங்கு பொதுவாக நாட்டாரியல் மீதும் குறிப்பாக மலையக நாட்டாரியல் மீதும் ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்துவதே ஆகும்.ஆரம்பகாலம் தொட்டு இற்றைவரை இவ்வகை இலக்கியங்கள் வாய்மொழியாகவே மக்கள் மத்தியில் வழங்கி வருவதனால் இதனை "வாய்மொழி" இலக்கியங்கள் எனவும் நாட்டுப்புறங்களை அதாவது கிராமங் களையே மையமாகக் கொண்டு வழங்கி வருவதனால் நாட்டுப்புறக் கலைகள் எனவும் கிராமியக்கலைகள் எனவும் வழங்கிவந்தது. அண்மைக் காலமாகவே இக்கலைகளுக்கு இலக்கிய அந்தஸ்து கொடுத்து நாட்டார் இலக்கியங்கள் எனவும் நாட்டாரியல் எனவும் அழைக்கத் தொடங்கினர்.

எனினும் காலத்துக்கு காலம் ஒரு சிலரால் இவைகள் தொகுப்புகளாகத் தொகுத்து அச்சுவாகனமேறி பவனிவந்துள்ளன. இவைகளில் அனேகமானவை நாட்டார் பாடல்களே! இவ்வகையில் மலையக நாட்டார் பாடல்களை "மாமன்மகளே" எனும் தலைப்பில் தொகுத்த மலையக மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை இவ்விடத்தில் நினைவுக் கூரத்தக்கவர்.

அத்துடன் கிராமப்புறங்களை நோக்கிப் படித்தவர்களையும், பட்டம் பெற்றவர்களையும், படையெடுக்க வைத்த பெருமை அமரர் பேராசிரியர் சுவித்தியானந்தனையே சாரும். குறிப்பாக நாட்டுக் கூத்துக்களுக்கு அவரளித்த ஊக்கமே நாட்டுப் புறங்களை நோக்கி பல்கலைக்கழக மட்டங்கள் திசைதிருப்பப்பட்டமை ஆகும். இவ்வகையில் அமரர் பேராசிரியர் கணபதிப்பிள்ளையையும், தொடர்ந்து கலாநிதி சி மௌனகுரு, கலாநிதி இ.பாலசுந்தரம் போன்றவர்களையும், தமிழகத்தைச் சேர்ந்த நவநீத கிருஷ்ணன் தம்பதிகள், மா. வரதராஜன் போன்ற இன்னும் பலரையும் குறிப்பிடலாம். மலையக நாட்டார் இலக்கியங்களை பொதுவாக பின்வருமாறு ஐவகையாகப் பிரித்து நோக்கலாம்

(1) நாட்டார் பாடல்கள்
(2) நாட்டுக்கூத்துக்கள்
(3) விட்டில் பாடப்படும் கதைப்பாங்கான பாடல்கள்
(4) பழமொழிகள்
(5) விடுகதைகள்

இவைகளில் பெரும்பாலானவை தமிழகத்தின் தாக்கங்களைக் கொண்டிருப்பதை உணரக் கூடியதாக உள்ளது. எனினும் இவைகள் தனித்தனியாகவும், விரிவாகவும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆராயப்பட வேண்டியவை.

இதில் முதலாவது வகை நாட்டார்பாடல்களே. இவை பொதுவாக தனிநிலைச் செய்யுள்களாகவும், தொடர்நிலைச் செய்யுள்களாவும் விளங்குவதனைக் காணலாம். இதில் செய்யுள்களுக்குரிய யாப்பு இலக் கணங்கள் ஒன்றையும் காணமுடியாது. இங்கு பேச்சுவழக்குடன் ஒட்டிய ஓசைச் சிறப்பும் தான் கூறவருகின்ற விடயங்கள் நேரடியாகவும், எளிமையும், சொற்கள் அவர்களையறியாமலே வந்து விழுகின்ற ஒரு போக்கும் காணப்படும். மலையக நாட்டார்பாடலில் கூடுதலாக துன்பச்சுவையே மிகுந்து நிற்பதைக் காணலாம். இதற்கு காரணம் இவர்களின் வாழ்வில் துன்பதுயரங்கள் மேலோங்கி நிற்பதே ஆகும்.

பொதுவாக நாட்டார் பாடல்கள் ஒரு மனிதனின் வாழ்வில் இடம்பெறும் அனைத்து அம்சங்களையும் பிரதி பலிக்கின்ற தன்மைகளை உணரலாம். எனவே நாட்டார்பாடல்களைப் பின்வருமாறு பிரித்து நோக்கலாம்.

(1) தாலாட்டுப்பாடல்கள்
(2) குழந்தைப்பாடல்கள்
(3) விளையாட்டுப்பாடல்கள்
(4) வேடிக்கைப்பாடல்கள்
(5) கும்மி கோலாட்டப்பாடல்கள்
(6) காதற்பாடல்கள்
(7) தொழிற்பாடல்கள்
(8) ஒப்பாரிப்பாடல்கள்
(9) கடவுள்வணக்கப்பாடல்கள்/ வேதாந்தப்பாடல்கள

இவைகளில் குறிப்பாகவும் சிறப்பாகவும் மலையக மக்களின் வாழ்க்கையினைப் படம் பிடித்துக் காட்டும் பாடல்களில் தொழிற்பாடல்களே முன்னிற்கின்றது எனலாம். இங்கு இரு பாடல்களை மட்டும் உதாரணத்துக்கு நோக்குவோம்

*"உச்சிமலைக் கவ்வாத்து,*
*உயர்ந்தமலை கொழுந்தொடிப்பு*

*தாழ்ந்த மலை களையெடுப்பு கை*
*நறுக்குமாகுதம்மா.*

*கொண்டைப்பிரம் பெடுத்து*
*கூலியாளை முன்னேவிட்டு*

*அண்டையிலே நிற்கிறாராம்*
*அருமையுள்ள கங்காணி.*

*அடியாதீங்க பிடியாதீங்க*
*அநியாயம் செய்யாதீங்க*

*கங்காணி வந்ததுமே கணக்கை*
*முடிச்சிருங்க"*

என்று தொடரும் பாடல் அடிகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏற்றமடி தேவிகுளம்

இறக்கமடி மூணாறு

தூரவழி நம்ம தோட்டம்

தொடந்துவா நடந்திடலாம்!

கங்காணிக் காட்டுக்குள்ளே

கணக்கப்பிள்ளே ரோட்டுமேலே

பெரியதுரை குதிரை மேலே

புறப்படப் போறதெப்போ?

கங்காணி கோபத்துக்கும்

காப்பித் தொங்கலேற்றத்திற்கும்

நம்மதுரை கோபத்திற்கும்

நடந்திட்டாலும் குற்றமில்லை

கண்டியிலே காப்பித்தண்ணி

கடலோரம் உப்புத்தண்ணி

மதுரையிலே பம்புத்தண்ணி

மதிமயக்கும் கொள்ளுதடி"

எனும் பாடலும் மலையக மக்களின் வாழ்வியலில் சில அம்சங்களை படம்பிடித்துக் காட்டவைக்கின்றன. இரண்டாவது பாடலில் "தொடந்து வா......" எனும் சொல் பேச்சு வழக்குடன் இணைந்து வருவதனை காணலாம். இவைகளை விட "பபூன் பாடல்கள்" எனும் ஒருவகைப் பாடல்கள் இன்றும் எம்மத்தயில் உலவுவதனை காணலாம். இதனை வேடிக்கைப் பாடல் என்ற வகைக்குள் உள்ளடக்கலாம்.

இரண்டாவது வகையானது மலையக நாட்டுக்கூத்துக்களாகும். இவைகளில் பொன்னர்-சங்கர் காமன்கூத்து, அருச்சுனன் தபசு, போன்ற மலையக நாட்டு கூத்துக்கள் எல்லோராலும் அறியப்பட்டதும், மிகப் பிரபல்ய மானதுமாகும். பொன்னர் -சங்கரானது மகாபாரதத்தின் ஒருபகுதியாக எண்ணியே ஆடப்படுகின்றது. இதுமறை முகமாக மறுப்பிறப்பின் நம்பிக்கை எனலாம். ஏனெனில் பொன்னராக தருமனும், சங்கராக விமனும் ஆசாரியராக துரியோதனனும் பிறந்து விரப்பூர் எனும் யுத்தகளத்தில் பதினைந்து நாட்கள் நடக்கும் யுத்தம் கூத்தாக நடை பெறுகின்றது.

இவ்வாறே காமன் கூத்தும் மன்மதன் சிவனின் கோபத்துக்கு ஆளாகி சுட்டெரித்து சாம்பலானதும் பின் ரதியின் கண்களுக்குத் தெரியும் வண்ணம் சிவன் வரம் கொடுக்கும் கதையினையும் அருச்சுனன் துபசு ஆனது மகாபாரதத்தில் அருச்சுனன் பாசுபதம் என்னும் அஸ்திரத்தை பெறுவதற்காக தவம் இருந்து அஸ்திரம் பெறும் கதையும் கூத்தாக ஆடப்படுகின்றது. இவைகளை தவிர கோவிலன்கதை (கோவலன்கதை), அரிச்சந்திரன் கதை, வள்ளிதிருமணம், சகுந்தலை, மருதைவீரன், போன்றவைகளும் மலையகத்தில் இன்றும் நாட்டுக்கூத்துகளாக ஆடப்பட்டு வருகின்றன்.

மூன்றாவது வகைகளாக வீட்டில் பாடப்படும் கதைப்பாங்கான கதைகளைக் கொள்ளலாம். இவைகள் விடுகளில் பெரியோர்களினால் பெரும்பாலும் இரவு வேளைகளில் படிக்கப்படுவது ஆகும். ஒருவர் படிக்கதொடங்கியதும் அயலிலுள்ளோர் ஒன்று கூடி சேர்ந்து கேட்டு இரசிப்பர். பஞ்சபாண்டவர் வனவாசம், குறவஞ்சி, இராமாயணம், நல்லதங்காள் போன்றகதைகளையும், கூத்துக்களாக ஆடப்படுபவைகளில் கோவலன் கதை, மருதைவீரன் கதை, வள்ளிதிருமணம் போன்றவையும் இங்கு படிக்கப்படுவதனைக் காணலாம்.

நான்காவது வகைகளாக முதுமொழிகளைக் குறிப்பிடலாம். இது எமது முன்னோர்களாலும், முதியவர் களாலும் நீண்டகால அனுபவத்தில் கண்ட உண்மைகளை பழமொழிகளாக உலாவவிட்டனர்.இவைகளும் இன்று கிராமிய இலக்கிய வடிவங்களாக கொள்ளப்படுகின்றன. உதாரணமாக

"கொட்டிக் கிழங்கு வெட்டுறப்ப

கோவிச்சுக்கிட்டாராம் பண்டாரம்

அவிச்சி உரிச்சி வைச்சவுடனே

சிரிச்சுக்கிட்டாராம் பண்டாரம்"

போன்ற பழமொழிகள் மலையக மக்களின் வாழ்வியலுடன் ஒன்றியுள்ள தன்மைகளை பேச்சோசையுடன் புலப்படுத்துகிறது.

ஐந்தாவதான வகைகள் "நொடிகள்" எனப்படும் விடுகதைகளைக் குறிப்பிடலாம். இவைகள் பொழுது போக்காகவும் சிந்திக்கவைக்கவும் ஒருவரின் விவேகத்தினை அறியவும் இன்னொருவருக்கு தொடுக்கும் வினாபோலவும் காணப்படும். அதேவேளை எம்மையும் எமது சுற்றுப்புறச் சூழலையும் பற்றியதாகவே காணப்படும். அவ்வகையில் மலையக சூழலின் வாழ்வியல் பற்றியதான விடுகதைகள் தோன்றின என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் பின்வரும் விடுகதைகளை உதாரணமாக நோக்கலாம்.

"ஆயி சப்பாணி மக இழுப்பாணி

விடை: அம்மியும் குழவியும்.

மணியடிச்சதும் மலைப்பாம்பு ஊருது"

விடை: புகை வண்டி

இவ்விடுகதைகள் கூட மலையகச் சூழலையும் மலையக பேச்சுவழக்குடன் ஒன்றியுள்ள தன்மைளையும் புலப்படுத்துகின்றது.

இவைகளைவிட இவைபோல இன்னும் பல்வேறு அம்சங்கள் எம் மத்தியில் உலாவுகின்றது. அவைகளைத் தேடிச்சேகரித்து தொகுத்து வெளியிடவும் அதேவேளை அருகிவரும் இவ்விலக்கியங்களுக்கு புத்துயிரளிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அத்துடன் நாட்டுக் கூத்துகள் போன்றவைகளில் புதிய உத்திகளையும் புதிய விடயங் களையும் ஏற்று வெளிப்படுத்தத் தக்கதாக காலத்திற்கு ஏற்ற மாற்றம் பெறுவது மிகச் சிறந்தது.அதன் காரணமாக இவைகளின் எதிர்காலம் ஆரோக்கிமானதாக விளங்கும் எனவும் நம்பலாம்.

இறுதியாக "இலக்கியம் ஒரு சமூகத்தின் குறுக்கு வெட்டுமுகம்" எனும் கூற்று எந்தளவிற்கு அங்கு பொருந்துகின்றது என்பதையும் ஒப்புநோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி ந.வேல்முருகுவின்

# மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்குமுறைகளும்.

சு. முரளிதரன்.

மலையக இந்திய வம்சாவளி இலங்கைத் தமிழர்களின் சமூக, அரசியல், பாரம்பரிய, பண்பாட்டு தனித்துவங்களை இனங்காட்டும் முயற்சி அறுபதுகளின் இறுதியில் தேக்கமுற்று மீண்டும் தற்போது முனைப்படைவதை ஆங்காங்கே அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் மலையக மக்களின் பண்பாட்டு பாரம்பரியத்தை படம் பிடித்து காட்டும் முயற்சியில் மாத்தளை வடிவேலனின் "மலையக பாரம்பரிய கலைகள்" என்னும் நூலுக்கு பின்னர் கலாநிதி ந.வேல்முருகுவின் "மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும்" வெளிவந்துள்ளது.

மலையக தமிழ் மக்களின் சமய நம்பிக்கை மனித நேயம் பொதிந்ததாக இருப்பதோடு எளிமைக்குரியதாக இருப்பதை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இவர்களின் வழிபாட்டு முறைகள் குறித்து ஆகமவிதிப்படி அமைந்தனவல்ல என்று குற்றஞ்சாட்டும் தொனியில் இது பற்றி கூறப்பட்டாலும், உண்மையில் அவ்வாறு ஆகம விதிப்படி அமையாத கோவில்களும் சிறு தெய்வ வழிப்பாட்டிடங்களும் மனிதர்க்கும் தெய்வத்துக்கும் கட்டற்ற நெருங்கிய தொடர்பு காணப்பட வேண்டியதன் தாற்பரியத்தை உணர்த்துவதாக அமைக்கின்றது.

தமது அன்றாட வாழ்க்கைமுறையில் உழைப்பையும் தனிப்பட்ட வாழ்வையும் பிரித்துப்பார்க்க முடியாத அளவுக்கு துன்பமே நித்தியமான மனிதர்களுக்கு திட்டமிட்ட நாளில் அல்லது நேரத்தில் தெய்வவழிபாடு செய்வதென்பதெல்லாம் நடைமுறை சாத்தியமற்றவை. எனவே பிராமணர்களின் அனுசரணையின்றி தமது விருப்பமான நேரத்தில் தமக்கு விருப்பமான பொருட்களை நைவேத்தியமாக படைத்து இலகுவாக வழிபாட்டை முடித்துகொள்ளும் வகையில் முனியாண்டி, ரோதமுனி, மதுரைவீரன், மாடசாமி, நொண்டிச்சி அப்புச்சி, வனத்து சின்னப்பர், செண்டாக்கட்டி முதலான சிறுதெய்வங்களை பொதுவான இடங்களில் வைத்து வழிபட்டு வரும் தமிழக நடைமுறையை பின்பற்றி வருகின்றனர்.

இவ்வாறான இவர்களின் வழிப்பட்டு முறைகளும் நம்பிக்கைகளும் தனித்துவமாக மலையக மக்களின் வரலாற்றில் இடம்பெற்று தனிக்கூறாக இனங்காட்டப்பட ஏதுவாயிற்று. இக்கருத்து மையமாக இழையோடும் வகையில் கலாநிதி ந.வேல்முருகுவின் இந்நூல் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

மதுரைவீரன் பெருந்தோட்டத் தமிழ் தொழிலாளர்களின் பிரதான சிறு தெய்வமாகும். பொம்மணன் எனும் பாளையக்காரனிடம் வேலை செய்த திறல்மிகு வீரனாகிய மதுரைவீரன் தெய்வமாக அங்கீகரிக்கப்படுமளவுக்கு உயர்த்தப்பட்டதன் பின்னணியில் சில சமூக அடிப்படைகள் இருக்கின்றன. இதனை இச்சிறு நூல் சற்றுவிரிவாக காட்டுவது, மலையகத்தில் சாதி பிரச்சினை பூதாகரமாக வெடிக்குமொன்றாக இல்லாவிடினும் மௌனமான அதன் பிரதிபலிப்புகள் இருப்பதை மறை பொருளாக உணர்த்துகின்றது.

காமன் கூத்து தொடர்பாக குறுகிய பூரண விவரணம் தருவதில் இந் நூலாசிரியர் வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடக்கூடிய அம்சமாகும். காமன் பொட்டல், காமன் நடல், காமன் காணிக்கை, காம தகனம், காமன் விருந்து போன்ற மலையகத்தின் கலாச்சார முத்திரையாக கருதப்படும் காமன் கூத்தின் பிரதான அம்சங்கள் குறித்தும் அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் குறித்தும் இந்நூல் கலந்துரையாடுகின்றது

குடும்ப வழிபாடு,சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு, உயிரின வ்ழிபாடு, தென்புலத்தார் வழிபாடு, காவல் தெய்வவழிபாடு என மலையக மக்களின் வழிப்பாட்டு முறைகளை பாகுபடுத்தி இந்நூல் கூறுவதோடு, அவ்வழிபாட்டோடு இணைந்த சமூக முக்கியத்துவத்தையும் பொருத்தமான இடங்களில் ஆராய்கின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை வட்டத்துடன் தொடர்பான மகப்பேறு, பெயரிடுதல், அன்னப் பிரசானம், காதுகுத்துக் கல்யாணம், முடியிறக்குதல், சாமர்த்தியக்கல்யாணம், திருமணம், மரணசடங்குகள் ஆகியவற்றை பொதுவாக அறிமுகப் படுத்தும் வகையில் இந்நூலின் இறுதிப்பகுதி அமைகின்றது. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் கலாசார வாழ்வியலின் முக்கியமானதும் இன்றும் மங்கிமறையாத அளவுக்கு பேணப்படும் அம்சங்களாக திகழ்கின்றன.

நூலாசிரியர் இந்நூலை தமது மலையக மக்களின் சமூகப்புவியியல் தொடர்பான பாரிய ஆய்வின் ஒரு இயலென முன்னுரை குறிப்பிட்டிருப்பதுடன், இவ்வாறு மலையக மக்கள் தொடர்பாக ஆய்வை மேற்கொள்ள தன்னை தீர்மானித்த காரணத்தையும் கூறுவது இவரின் பெருந்தன்மையை புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் மலையகமென்பதை தரைத்தோற்ற அடிப்படையில் உயர்நிலம், இடைநிலம், தாழ்நிலமென பிரிப்பது தரைத்தோற்றப் பண்பை மட்டுமல்லாது அவ்வப் பகுதியில் அமைந்துள்ள கோவில்களில் வேறுபாடு, சிறுதெய்வ வழிபாடுகளில் வேறுபாடுகள் ஏனைய சமூக மக்களோடு கொண்டிருக்கும் இடைவினையின் தாக்கத்தால் விளைந்த வேறுபாடு என்பவற்றை தனது பாரிய கள ஆய்வுப்பணியில் பெற்ற தகவல்களை வைத்து பகுப்பாய்வு செய்திருப்பது இனி மலையகம் தொடர்பாக அணுகுவோர்க்குப் புதுப்பாதை காட்டுவதாக அமைந்துள்ளது. அந்த வகையில் இச்சிறு நூல் முக்கியத்துவம் பெறுவதாகவும் முன்னோடியானதாகவும் விளங்கும்.

தனது ஆய்வின் ஒரு சிறுபகுதியே என மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்குமுறைகளும் தொடர்பாக கூறுவதோடு, இவை மேலும் விரிவான முறையில் ஆராயத்தக்கன என வலியுறுத்துவது இவரின் முயற்சியின் இலக்கு ஒரு போதுமான அறிமுகத்தை ஏற்படுத்துவதே என்பதை வரையறை செய்கின்றது. தான் எடுத்துக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றுவதில் பூரணம் பெறுவதோடு, நூலாசிரியர் கூறுவதை போல "மக்களிடம் கற்றவற்றை மீண்டும் அம்மக்களுக்கு வழங்குவதில்" வெற்றி பெற்றிருக்கின்றார்.

மலையக இளைஞர்கள் தமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு பொருள் இருப்பதை உணர்ந்து கொள்ள இந்நூலை வாசிப்பது அவசியமாகும்.

❄ ❄ ❄

# பெரியய்யா

நடைச்சித்திரம்

க.ப.லிங்கதாசன்

காதோரம் நரைத்திருக்கும் கருத்துமயிர் நான்கிருக்கும்
காணவில்லை! நடுத்தலையில் ஒன்றும்! - கையில்
தோதாக குடைசுழற்றி தொந்தி தள்ளி அசைகின்ற
தூயவரின் "கோட்டும் சூட்டும்" மின்னும்! - தார்ப்
பூசாத மணல் "ரோட்டில்" "பூட்ஸ்" நடை சரசரக்கப்
போகின்றார் "பெரிய கிளார்க் ஐயா"! - வாய்
பேசாத பிள்ளைகூடப் " பெரியய்யா" சொல்லுக்குப்
பிசகாத மகிழ்வின் நடை துள்ளும்!

காலமெல்லாம் போராட்டம் கணக்கோடு! என்றென்றும்
கைபிரித்த பேனாதான் மிச்சம்! - "ஸ்டாவ்ஸ்"
கோலத்தில் உறவாடிக் கொண்டதனால் வருமானக்
குறைவாழ்வைக் காட்டிடவோ அச்சம்! - இளங்
காளையொன்றும் வாலையிளங்க கன்னிரெண்டும்-
"போடிங்கில்"
களிப்பொடு பெருமையிலே துள்ளும்! - இந்த
வேலையினை விட்டாலோ வேறுவழி இல்லையென
வீற்றிருப்பார் "ஆபீசில்" என்றும்!

அரைவாசி ஆங்கிலமாய் அரைவாசி அருந்தமிழாய்
அலசிவிடும் கலப்புமொழி அதிரும்! - எல்லாத்
துரைபெயரும் தோட்டத்துத் தொழிலாளர் பெயரையெல்லாம்
தொகுத்தளிக்கும் "அகராதி" பாரும் ! - ரோலர்
அரைத்தெடுத்த தேயிலைத்தூள் அடுப்பினின்றும் வெளியேறி
அசல்கறுப்பாய் மாறுதல் போலாவார்! - "பென்சன்"
வரையிருந்து உழைத்துவரும் "பெரியய்யா" தள்ளாடி
வரும் போது யார்மதித்தார் இன்று?

கவிஞர் க.ப. லிங்கதாசன் கவிதைகள் மாத்திரமின்றி சிறுகதை கட்டுரை, சிறுவர் பாடல்கள் என்றுதன் ஆளுமையை வெளிப்படுத்தி வருபவர். "குறள் கூறும் மலையகம்" "குழந்தைக்குயில்" ஆகிய படைப்புகள் அச்சில் வந்துள்ளன. கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக எழுதி வரும் இவர் பழகுவதற்கு இனியவர். அண்மையில் இந்துசமய கலாச்சார இராஜாங்க அமைச்சினால் "தமிழ்மணி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணோடு கலந்தவன்

மல்லிகை சி.குமார்.

பக்கத்து தோட்டத்திலிருந்து இங்கே வேலைக்கு வந்திருக்கும் அவர்கள் இன்னும் வேலையைத் தொடங்காமல் கண்ரைக்டர் வருகைக்காக காத்திருந்தார்கள்.

"என்னா சிங்காரம் எங்களுக்கெல்லாம் வேலைக்கிடைக்கும் தானே". . . . . . -தங்களையெல்லாம் இங்கு வேலை இருக்கு என்று சொல்லிக்கூட்டி வந்த சிங்காரத்தைப் பார்த்து கேட்டார் சிலுவையா.

"இந்தா பாருங்க சிலுவைய்யா. . . என்மேலே சந்தேகமா? நேத்து பெரியவரே என்கிட்ட சொன்னாரு... மணலு செங்கலு எல்லாமா மெயின் ரோட்டு ஒரத்திலேயே குமிஞ்சிக் கெடக்கு. அதை யெல்லாம் மேலே தூக்கி கொண்டு வந்து தலத்தில சேர்க்கணும். அப்புறம் அஸ்திவாரம் கட்டியிருக்கிற தளத்துக்கெல்லாம்... மண்ண கொட்டி கெட்டியாக்கணும். சுத்தி காடா இருக்கிற செடி கொடி எல்லாம் வெட்டியாகணும் இதுக்கெல்லாம் ஆட்கள் தேவை. அவுங்கள வச்சே..... மேசன் மார்களுக்கு சிமிந்தி குழைச்சிக் கொடுக்கவும், செங்கல் தூக்கிக் கொடுக்கவும் வச்சிக்கிட்டா....... நல்லம். புதுசு புதுசா ஆட்களை தேட வேண்டிய சிரமம் இருக்காதுன்னு சொல்லவும் தானே .....

"பயப்படாதீங்க......வேண்டிய ஆளுங்கள நாளைக்கே நான் கூட்டிக்கிட்டு வர்ரேன்னு வாக்கு கொடுத்துட்டுதானே உங்கள எல்லாம் இப்ப கூட்டிக்கிட்டு வந்திருக்கேன். அப்ப எப்படி வேலகிடைக்காமபோகும்."

"ஆமா இங்க இருந்த பழைய பங்களா எல்லாம் ஒடச்சிப்புட்டாங்களே....இனிம இங்க என்னாக்கட்டப்போறாங்களாம்?" என்று கேட்டாள் ரஞ்சிக்குட்டி.

"ரெஸ்ட் ஹவுஸ் அதாவது உல்லாசப்பயணம் வர்றவுங்க வந்து தங்கிக்கொள்ளவிடுதி கட்டப்போறாங்க."- என்றவன். "வேனுமின்னா....நாமக்கூட இங்க வந்து சந்தோசமா இருக்கலாம்"..... - என்று ரஞ்சியைப்பார்த்து கண்ணடித்து கொண்டே சொன்னான்.


"ஐய்ய ...ஆசையப்பாரே.... இவுரு பெரிய மன்மதன்......... இவரோட வந்து தங்கனுமாக்கும்". என்று ரஞ்சி சொல்லவும் மற்றவர்கள் கொல்லென்று சிரித்தார்கள். அதேநேரம் பச்சைநிற ஜீப்வண்டி மெயின் ரோட்டிலிருந்து திரும்பி......... மேலே உறுமிக்கொண்டு வந்து தலத்தில் நின்றது. டயரின் ரேகைகள் மண்தரையில் அழுத்தி பதிந்திருந்தன.

ஜீப் வண்டியை விட்டு இறங்கிய கண்ரைக்டரைக் கண்டதும்

"குட்மோனிங்கையா" என்றான் சிங்காரம். "குட்மோனிங்" என்று தலையை ஆட்டிவிட்டு நேரே அஸ்திவாரம் போட்டுக் கொண்டிருக்கும் இடத்துக்கு போனவர் சிறிது நேரம் அங்கே நடக்கும் வேலையை நோட்டம் விட்டார். பின் ஹெட்பாஸை அழைத்து சில திருத்தங்களை சொல்லிவிட்டு.... அவனோடு தகரங்களைால் அமைக்கப்பட்டிருக்கும் ஸ்டோர்ரூமுக்குள் நுழைந்து அங்கே அடுக்கப்பட்டிருக்கும் சிமிந்தி மூட்டைகளையும் கணக்கெடுத்துவிட்டு அவனோடு வெளியேவந்தார். கட்டிட சம்பந்தமான தன் அபிப்பிராயங்களை அவனிடம் சொல்ல...... அவனும் தலையை ஆட்டிக்கொண்டு எதையெதையோ சொன்னான். பின் ஸ்டோர் ரூமை இழுத்து சாத்திவிட்டு அவன் மீண்டும் வேலை நடக்கும் இடத்துக்கு செல்ல... கண்ரைக்டர் ஒரு சிகரெட்டை எடுத்து பற்றவைத்து புகைப்பிடித்தப்படியே நின்ற இடத்தில் நின்றபடியே தலம் முழுவதையும் நோக்கி பரவலாக தன் பார்வையை செலுத்தினார். சிகரட் கருகி பாதியாகி விட்டது.

அதை வீசிவிட்டு...... சிங்காரம் நிற்கும் இடத்தை நோக்கிமெதுவாக நடந்தார். அவரின் பூட்ஸின் அடிப்பக்க அடையாளம்...மண் தரையில் அவர் நடக்க நடக்க பதிந்தது.

"ஏய் பெரியவரு வர்றாரு....எல்லாரும் வரிசையா நில்லுங்க"....என்று சிங்காரம் மெதுவாக சொன்னதுதான் தாமதம் ....பக்கத்து டெவன்



தேயிலைக்காடுகளும் மலை முகடுகளுமே மல்லிகை சி.குமாரின் உலகம். அந்த உலகத்துமனிதர்களைப் பற்றிய யதார்த்தங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர். இவர் சிறுகதை மாத்திரமின்றி கந்தக வரிகளைக் கொண்ட கவிதைகளை தந்துள்ளார். இவர் ஓவியம் தீட்டுவதிலும் வல்லவர். இவரது கவிதைகளும் கதைகளும் தொகுதிகளாக விரைவில் வெளிவர உள்ளன. அண்மையில் இவர் இந்து கலாச்சார அமைச்சினால் தமிழ்மணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்திலிருந்து இவன் கூட்டிக் கொண்டு வந்திருந்த அனைவரும் வரிசையாக நின்றனர்.

இவர்களுக்கு மிக அருகில் நெருங்கி வந்த கண்ட்ரைக்டர்....மூக்கும் முழியுமாக் தேகக்கட்டோடு நிற்கும் ரஞ்சிக்குட்டியை நோக்கி

''ஒனக்கு வயதென்னா?'' என கேட்டார்.

''பதினாறுங்க'' அவள் பதில் சொல்லுவதற்கு முன் சிங்காரமே முந்திக் கொண்டு அவளின் வயதை சொன்னான் .

இதனால் அவனை முறைத்துப்பார்த்தவர் மீண்டும் அவளை நோக்கி

'பேரென்னா'' என கேட்கவும்

''ரஞ்சிதம்'' என்று அவளே பதில் சொன்னாள். ''ஒம் பேரு என்னா?'' தொங்கலில் நிற்பவரை நோக்கி இவர்கேட்க

''சிலுவைங்க'' என்று பதில் வந்தது

''வயசு?''

''அறுபதாகப் போவுதுங்க''

பதிலைக்கேட்டு முகத்தை சுழித்த கண்ரைக்டர் ''ஒனக்கு வேலை செய்ய முடியுமா?'' என கேட்டதும்.

''அதெல்லம் முடியுமுங்க முன்பு தோட்டத்தில வேலை செய்யிரப்ப ஒரு மூட்டை அரிசியை தனியா தூக்கி தலையில வைப்பேணுங்க. அந்த காலத்தில நாங்க சாப்பிட்ட சாப்பாடு அப்படி. அந்த ஊக்கந்தாங்க இன்னும் இந்த ஒடம்பில இருக்கு. இல்லாட்டி..... பாணுக் கெடைக்காம அலஞ்ச பஞ்சத்திலேயே இந்த ஒடம்பு ஒழிஞ்சுப் பொயிருக்குங்க,'' என்று சிலுவை சொல்லிக்கொண்டிருக்கும் போதே இடையில் விழுந்த சிங்காரம்......

''சிலுவைய்யா.......பெரியவர் கேட்டதுக்குமட்டும் பதில் சொல்லு . நீ என்னமோ பழசை எல்லாம் கிளறி எடுக்கிருயே'' என்று சத்தமிட்டான்.

''அட அவரு சொல்லுறத சொல்லட்டுமே நீ எதுக்கு இப்படி குதிக்கிற.''...... என்று சிங்காரத்தை பார்த்து கண்ரைக்டர் சொன்னதும், வாலை மடக்கிக் கொண்டு ஒரு ஒரமாக ஒதுங்குவது போல ஒடுங்கிப்போய் நின்றான் அவன்.

''நீங்க எல்லாருமே இங்க வேல செய்யலாம்...... ஆனா பகல் சாப்பாடு''.....?

''நாங்க எல்லாருமே பகல் சாப்பாட்டோடத்தாங்க காலையிலேயே வந்தோம். இந்த சிங்காரம் தம்பி எங்கள இங்கே வேலையிருக்குன்னு கூப்பிட வர்ரப்ப...... பகல் சாப்பாட்டையும் எடுத்துக்கிட்டே வந்திடுங்கன்னு சொல்லவும் நாங்களும் ரெடியா வந்திட்டோங்க'' என்றார் சிலுவையா. ''அப்பசரி இப்பவே எல்லாரும் வேலையை தொடங்குங்க. அதுக்கு முன்ன முக்கியமான விசயம்.''

''சொல்லுங்க''

''யாரும் இங்க இருந்து எதையும் திருடிக்கிட்டு போகக் கூடாது.''

''இல்லீங்க நாங்க திருட மாட்டோமுங்க'' என்ற குரல்கள் ஒருமித்து ஒலித்தன.

''அடுப்பு போட செங்கல்லு வேணுமுன்னு மடில்லகிடில்ல கட்டுக்கிட்டு யாரும் போனா அது குத்தம்'' விடலைகளை பார்த்தப்படியே அவர் சொன்னதும்

''நாங்க யாரும் அப்படி செய்ய மாட்டோமுங்க. வேணுமின்னா ஐயாகிட்ட கேட்டு ஒடஞ்சத சிடஞ்சத''.... என்றாள் ஒரு நடுத்தர வயதுகாரி.

''இன்னொரு விசயம் இங்க வேலை செய்யிற எந்த எளந்தாரிக்கிட்டயும் நீங்க யாருகிட்டயும் அளவுக்கு அதிகமா சிரிச்சி சிரிச்சி பேசக்கூடாது. அப்புறம் ஒங்களுக்குள்ள தப்புதண்டு நடந்திட்டா.... அது செங்ககல்ல மடியில வச்சி மறைச்சிக் கட்டிநகதைவிட பெரிய குத்தமாய் போயிரும்.''... என்றார் அவர்.

இதைக்கேட்ட ரஞ்சிதம் உணர்ச்சிவசப்பட்டவளாய்..... ''நாங்க யாரும் அப்படி நடக்கவும்மாட்டோம், எங்க கிட்டயாரும் தப்புதண்டா நடந்திக்க வந்தா.... கொடல உருவி மால போடாம விடமாட்டோம்'' என்றாள்.

''அந்த வார்த்தை போதும்'' என்றவர் தோட்டப்பிள்ளைகளை பத்தி எனக்கு நல்லாவேத் தெரியும். ஏன்னா நானும் தோட்டங்கள்ல கிளார்க்கா வேலை யெல்லாம் செஞ்சித்தான் இப்ப பில்டிங் கண்ரைக்டராக இருக்கேன் என்றார். பின் சிங்காரத்தை நோக்கி

''சிங்காரம்... இவங்கவூட்டு வேலைக்கெல்லாம் நீதான் பொறுப்பு. இந்த கட்டடம் இந்த பகுதிக்கே அழகானதா இருக்கனும்.இந்த பில்டிங் கட்டி முடியுரவரைக்கும் இதுகளுக்கெல்லாம் இங்க வேலைதரமுடியும்'' என்றார்.

''நல்லதுங்க..... இதுகளெல்லாம் இப்ப தோட்டத்தில ''கெசுவல்'' வேலைதாங்க செய்யுதுங்க.இருந்திருந்து எப்பவாவது தோட்டத்தில வேலக்கெடைக்கும். நீங்க இங்க லேலைக்கு கூப்பிட்டது ரொம்ப நல்லாப்போச்சிங்க''.... நன்றியோடு சொன்னான் சிங்காரம்.

''ஒரு நோட்டு புத்தகத்தில இவுங்களோட பேரை எல்லாம் எழுதி வச்சிக்க. என்றவர்'' தன் கையில் வைத்திருந்த கையடக்கமான நோட்டு புத்தகத்தை அவனிடம் கொடுத்துவிட்டு

''இப்ப இங்க இந்த பத்து பேரு இருக்காங்க தானே.......இதுல அஞ்சி பேரு..... மெயின் ரோட்டில உள்ள செங்கல்ல தூக்கட்டும். அது இந்த பொம்பளபிள்ளைங்க செய்யப்பட்டும். மீதிப்பேரு பாஸ்மாருக்கு உதவிய சிமிந்திக் கொழைச்சி கொடுக்கட்டும்'' என்று சொன்னவர் கைக்கடிகாரத்தை பார்த்துவிட்டு

''வேலை எல்லாம் ஒழுங்கா நடக்கட்டும். நான் பின்னேரம் வர்றேன்''... என்று சொல்லிவிட்டு ஜீப்பை நோக்கி நடந்தார். இதுவரைக்கும் பேப்பர் படித்து கொண்டிருந்த ஜீப் சாரதி... இவரின் வருகைக்கு பின் பேப்பரை மடித்து வைத்துவிட்டு ஜீப்பை ஸ்டாட் செய்தான். அவர் வண்டியில் ஏறிய பிறகு அது அங்கிருந்து கிளம்பியது.

சிங்காரம் சிலுவையை பார்த்து ''சிலுவைய்யா..... நீங்க, இந்த தங்கராசு, சந்திரு எல்லாம் போயி...... பாஸ்மாருக்கு சிமிந்தி கொழைச்சி கொடுங்க. நான் இந்த பிள்ளைகளை வச்சி..... ரோட்டில இருக்கிற செங்கல்ல எல்லாம் மேல கொண்டு வந்திடுறேன்'' என்று சொல்லிவிட்டு விடலைகளை கூட்டிக் கொண்டு மெயின் ரோட்டுக்கு போனான்.

வேலைத்தொடங்கியது.

ரோட்டோரம் குவிந்து கிடந்த செங்கற்கள் கொஞ்சம் கொஞ்சமாக கரைந்து மேலே தளத்திற்கு போய் சேர்ந்து கொண்டிருந்தன.

செங்கற் சுமக்கும் பெண்கள் உற்சாகமாகவே வேலை செய்தார்கள். அவர்கள் தலையில் செங்கற்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி அனுப்பும் சிங்காரம் கேலியும் கிண்டலுமாக எதையாவது அவர்களிடம் சொல்லி வேலை வாங்கிக் கொண்டிருந்தான்.

உச்சி வெயில் நேரம்.

பக்கத்து தோட்ட தேயிலை தொழிற்சாலையிலிருந்து பன்னிரண்டு மணிக்கு ஆலைசங்கு முழங்கியது.

சாப்பாட்டு வேளையையும் கடந்து அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

"என்னா யாருக்கும் பசி எடுக்கலையா?" மண் மேட்டிலிருந்து சிலுவை சத்தம் வைக்கவும்.......

"இந்தா வந்திட்டோம்" என்ற சிங்காரம்

"ஏப்புள்ளகளே....... எல்லாம் சாப்பிட்டு வாங்க" என்று சொல்லிவிட்டு ஒரு பெண்ணை பார்த்து

"ஏ புஸ்பம்........ காலையில நாக் கொடுத்த சாப்பாட்டு பார்சல் எங்கே?" எனக் கேட்டான்.

"எல்லாத்தோட சாப்பாடும் மேலத்தான் இருக்கு" என்று சொல்லவும் சிங்காரமும் மேலே ஓடினான். அவர்கள் எல்லாரும்...மத்தியான சாப்பாட்டோடு ஒரு மேடான மண் திடலில் அமர்ந்தார்கள்.

அந்த இடத்திலிருந்து பார்க்கும் போது பத்தனை சந்திலிருந்த போஹாவத்தையை நோக்கி வளைந்து போகும் பிரதான சாலையும் வெள்ளியை உருக்கி ஊற்றியது போல சோவென விழுந்து கொண்டிருக்கும் டெவன் நீர்விழ்ச்சியும் இப்பகுதியில் பெரும் பகுதியை உள்ளடக்கிய பள்ளத்தாக்கின் பசுமை காட்சியும், இளம்பச்சை புல்வெளிக்கிடையே நடந்து கொண்டிருக்கும் ஆற்றின் மினுமினுப்பும் பார்வைக்கு மிக ரம்மியமாகவே இருந்தன.

இந்த வனப்பையெல்லாம் பார்த்தப்படி ரொட்டியை தின்று கொண்டிருந்த ரஞ்சி...... தற்செயலாக தன் பக்கத்தில் இருந்த சிலுவையை நோக்கினாள்.

அவரோ பிரித்த சாப்பாட்டை எடுத்து சாப்பிட மறந்தவராக எதிரே சோவென விழுந்து கொண்டிருக்கும் டெவன் நீர்விழ்ச்சியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். ரஞ்சி அவரை சிறிது நேரம் அமைதியாக பார்த்துவிட்டு...

"சிலுவைய்யா சாப்பிடலையா....? என்னமோ பெரிய யோசனையில அந்த நீர்வீழ்ச்சியையே பார்த்துக்கொண்டிருக்கீங்களே"..... என கேட்டாள். "ரஞ்சிக்குட்டி.... அந்த நீர்வீழ்ச்சியோட ஓசை ஒங்க காதுக்கெல்லாம் எப்படி கேக்கிதோ எனக்கு தெரியாது......... ஆனா என் காதுக்கு"

"அது.......ஏ....லெச்சுமா.......... ன்னு சொல்லிக்கொண்டே விழுவதுபோல இருக்கு" என்று சோகம் கலந்த குரலில் சொன்னார்.

"அப்படியா சத்தம் கேட்கிறது?" என்ற ரஞ்சிதம் நீர்வீழ்ச்சி ஓசையை கூர்ந்து கேட்டு விட்டு

"ஆமா அப்படித்தான் கேட்குது" என்றாள்.

"ஆயிரம் ஆயிரம் குரல்கள் ஒண்ணா சேர்ந்து லெச்சுமான்னு சொல்லுற மாதிரிதானே இருக்கு?" சிலுவைக் கேட்டதும்

"ஆமா"..... ரஞ்சி தலையாட்டினாள்.

"நீங்க ரெண்டு பேருமா என்னா லெச்சுமணனைப் பத்தி கதைக்கிறீங்க போல" என்று சற்று தள்ளியிருந்த சிங்காரம் நெருங்கிவர மற்றவர்களும் வந்து சூழ்ந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

"இந்த நீர்விழ்ச்சிக்கு எதிரே இங்க உல்லாச பயணிகளுக்காக எவ்வளவோ செலவு செஞ்சி பங்களா கட்டப்போறாங்க. ஆனா... நமக்காக நம்ம தொழிலாளர்களுக்காக இந்த மண்ணில் உயிர்தியாகம் செய்த அந்த சிவனு லெச்சுமணனுக்கு ஒரு நினைவு சின்னத்தைக்கூட அவன் உயிர்விட்ட இந்த இடத்தில் யாருமே கட்டவைக்க முன்வரவில்லை"..... என்று சிறிது ஆத்திரப்பட்டு சொன்ன சிலுவை பின் நிதானமாக

"ரஞ்சி அதோ ஆத்துக்கு அப்பால தெரியுதே ஒக்ஸ்போர்ட் தோட்டம், அதுல.... அந்தா அந்த மண்ணு இடிஞ்ச எடத்துக்கு மேல ஒரு லயம் தெரியுதே. அதுலதான் அந்த சிவனு லெச்சுமன் இருந்தான். அவன் மரணமான அந்த சம்பவத்தன்னைக்கி....... காலையில இருந்தே வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்திச்சி.

"கொளனிக்காக தேயிலை தோட்ட நிலத்தை அளக்க வர்ர கோஷ்டியை தேயிலைக்குள் ஏற விடாமல் தடுப்பதில் நம்ப டெவன் தோட்ட தொழிலாளர்களும், பக்கத்து தோட்ட தொழிலாளர்களும் மும்முரமாக இருந்தோம்.

"தேயிலையை விட்டா நமக்கெல்லாம் வேற கதியில்லன்னு நானும் நம்ம ஆளுங்களோட தீவிரமா மலையில நின்றேன்.

"பின்னேரத்துக்கு மேல....மழை பெரிசா பெய்ய தொடங்கிறிச்சி.

"காலையில நிலம் அளக்க வந்து முடியாமல் தோல்வியோடு போன கோஷ்டி பின்நேரத்தில் மீண்டும் மழையையும் பொருட்படுத்தாமல் துணைக்கு ஆயுதம் தாங்கிய பொலீஸ்காரர்களோடும் வந்து சேர்ந்தது மீண்டும் அவர்கள் தேயிலை நிலத்தை அளக்க முயன்றார்கள். அதை முறியடிக்க தொழிலாளர்கள் தீவிரப்பட்டார்கள்.

"தோட்ட நிலத்தில் கை வைக்காதே

"கொளனிக்காக நிலத்தை அளக்காதே. என்று சத்தமிட்டோம்.

அவர்களை எதிர்த்து போராடினோம்.

"எங்களுக்கு ஆதரவாக பல தொழிலாளர்கள் பக்கத்து தோட்டங்களிலிருந்து வந்து சேர்ந்தார்கள். ஆத்துக்கு அப்பாலுள்ள அந்த ஒக்ஸ் போர்ட் தோட்டத்திலிருந்தும் பல இளந் தொழிலாளர்கள் மழையால் பெருக்கெடுத்து ஓடும் ஆத்து நீரையும் பொருட்படுத்தாமல்.... ஆத்தை கடந்து வந்து எங்களுடன் ஒன்றாய் சேர்ந்து குரல் கொடுத்தார்கள். துப்பாக்கியை தூக்கிக்கொண்டு பொலீசார் எங்களை விரட்டியடிக்க முனைந்தார்கள்.

"போராட்டம் உச்சக்கட்டமானது.

"தொழிலாளர்களின் சக்தி எல்லாம் ஒன்றுபட்டதுபோல் ஒரு உத்வேகம்.

"ஏய் நிலத்தை பறிக்காதே! தேயிலை நிலத்தை அளக்காதே!" நெஞ்சை நிமிர்த்தி உரக்க குரல் கொடுத்த அந்த இளைஞனின் நெஞ்சை நோக்கி பாய்ந்தது..... ஒரு குண்டு.

"நிலத்தை பறிக்காதே!" அலறிக் கொண்டு நிலத்தில் விழுந்த அந்த இளைஞனின் குருதி இந்த மண்ணை நனைத்தது.

"அய்யோ லெச்சுமா!" எத்தனை குரல்கள் ஒன்று சேர்ந்து அப்பொழுது ஒலித்தன தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த அலறல் ஏதோ ...இன்றும் இப்பொழுதும்....... அந்த நீர் வீழ்ச்சி சத்தத்துடன் கலந்து ஒலிக்கிறது."என்று பேச்சை சிறிது நேரம் நிறுத்திய சிலுவை மீண்டும் தொடர்ந்தார்.

'ராமாயணத்தில மாயமான் அம்புபட்டு விழந்தப்ப.....லச்சுமனா! என்று கத்திக்கொண்டு நிலத்தில் விழுந்ததாம். இங்கு லச்சுமனனோ குண்டடிப்பட்டு விழ்ந்தப்ப " நிலத்தைப் பறிக்காதே! "ன்னு அலறிக்கொண்டுதான் நிலத்தில் விழுந்தான

'அவனின் உயிரைப்பறித்தப் பிறகு இங்கே நிலம் பறிக்கும் திட்டமே நின்னுப்போயிருச்சி. தொழிலாளர்களின் அந்த நிலம் பற்றிய பிரச்சினையை தீர்த்து வைக்க ஒரு தொழிலாளியின் உயிர்த் தியாகம் தான் முக்கியமா இருந்திச்சி. அந்த தியாகியின் அடக்கத்துக்கு இந்த மலை நாடே திரண்டு இங்க வந்திச்சி அப்படியொரு கூட்டத்தை அதன் பிறகு இன்னும் நான் இங்க பார்க்கல்ல.

''இந்த தியாகிக்கு இங்கே நினைவுச்சின்னம் நிறுவுவோம்"" ன்னு தொழிற்சங்கவாதிகள் எல்லாம் அவன் பிணத்தின் மீது சத்தியம் பண்ணி சபதமெடுத்தார்கள். ஆனா...... இந்த மண்மீது பற்று வைத்து மண்ணோடு மண்ணாய் கலந்த அந்த தியாகிக்கு இன்னும் இங்க யாரும் நினைவு சின்னம் எழுப்பல்ல.

"சிவனு லெச்சுமணனுக்கு நினைவு ஸ்தூபி நிறுத்துவோம்" என்று ஒட்டுக்கேட்டு வென்றவர்கள் கூட அவனை மறந்துட்டாங்க"......... கவலையோடு சொன்னார்.

'சிலுவைய்யா கவலைப்படாதிங்க... நாம அவனுக்கு நினைவுச்சின்னம் கட்டுவோம்" என்றான் சிங்காரம்.

''அவனை ஏறிட்டு பார்த்த சிலுவைய்யா உன்மாதிரி எத்தனையோ இளைஞர்கள் சொல்லிக்கொண்டுதான் இருக்காங்க செய்யல்ல".

''யாரும் செய்தாலும் செய்யா விட்டாலும் அந்த நீர் வீழ்ச்சி....... லெச்சு.....மா...... என்ற ஓசையோடு வீழ்ந்துகொண்டுதான் இருக்கும்" என்றார்.

"அதுமட்டுமல்ல சிலுவைய்யா... இந்த கட்டிடம் கூட அந்த தியாகியை நினைவு சொல்லத்தான் போகுது என்றாள் ரஞ்சி.

புரியாதவர்களாக எல்லோரும் அவளை நோக்கினார்கள்.

"ஆம் இந்த எடத்தில உருவாகிற இந்த உல்லாச கட்டடம்... நம்மப் பொறுத்தவர சிவனு லெச்சுமனின் நினைவு சின்னம்தான். நாம அந்த கட்டடத்திற்காக தூக்கி வைக்கிற ஒவ்வொரு செங்கல்லும் அந்த தியாகியின் நினைவாகத்தான் இருக்கும்" என்றாள்.

"ரஞ்சி சொல்லுறது சரி"

"நாங்க வேர்வ சிந்தி மணலோடு சிமிந்தியைக் குளைச்சி கொடுக்கிறோமே அதுகூட இனி அந்த தியாகியின் நினைவுக்காகத்தான்" என்றான் தங்கராசு.

"இதை கேட்ட சிலுவை...நம்மலால அவனுக்கு இங்க ஒரு நினைவு சின்னம் தனியா கட்ட முடியாவிட்டாலும் எங்களின் உழைப்பாலும் உருவாகும் இந்த கட்டிடத்தை அவனின் நினைவாக ஏற்றுக்கொள்வோம். அடுத்தவங்க கண்களுக்க இது உல்லாச விடுதியாக இருக்கலாம். ஆனா....... நம்ம எல்லாத்தையும் பொறுத்தவரை இது இந்த மண்ணோடு கலந்த தியாகியின் நினைவுச்சின்னந்தான்" என்றார்.

"இங்கே உருவாகின்ற இந்த கட்டிடம் இங்கே உயிர் நீத்த தியாகியின் நினைவுச் சின்னமாகவே நாம் ஏற்றுக்கொள்வோம் என்றாள்" ரஞ்சிக்குட்டி

## "பாரதி" இராமசாமிக்கு மணிவிழா



மலையகத்தில் எல்லோராலும் 'பாரதி" இராமசாமி என்று அழைக்கப்படும் பதுளை பாரதி கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போது பதுளை கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு அமைப்பின் பொருளாளருமான திரு. க.இராமசாமியின் மணிவிழாவை கொண்டாட அவரது மாணவர்களும் நண்பர்களும் முன்னின்று செயல்படுகின்றனர். அறுபது வயதிலும் இருபது வயது இளைஞனைப்போல சுறுசுறுப்புடன் செயல்படுகிறார். இவரது மணிவிழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று ஆர்வம் கொண்டு செயற்பட்டு வருகிறார் பாரதி கல்லூரியின் தற்போதைய அதிபர் திரு.கணேசன் இதற்காக மணிவிழாக்குழுவும் அமைத்துள்ளார்.

பாரதி இராமசாமி பாரதி கல்லூரி அதிபராக இருபதுவருடங்கள் கடமையாற்றியுள்ளார். "பாரதி" "தேயிலைத் தோட்டத்திலே" போன்ற சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளார். உலக தமிழ்ப்பத்திரிக்கைகளின் கண்காட்சியை பதுளையில் நடத்தியுள்ளார். முதன்முதல் மலையக பாடசாலைகளுக்கு இடையே விளையாட்டுப் போட்டியை நடத்தியவர். பல பட்டத்தாரிகளை உருவாக்கியவர்.

ஊவாபிரதேசத்தில் மாணவர்களிடையே வாசிப்பு தன்மையை தூண்டும் விதத்தில் தரமான சஞ்சிகைகள் இலக்கிய படைப்புகளை வாங்கி அவர்களிடையே விநியோகித்து தனிமனித நூலகமாக இயங்கிவருகிறார். மலையக எழுத்தாளர்களின் படைப்புகளை அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் காட்டுகிறார். அண்மையில் பதுளையில் இவரின் முயற்சியால் நூல் கண்காட்சியும் நூல்கள் விற்பனையும் இடம் பெற்றது. இதனால் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் எழுத்தாளர்களும் நன்மையடைந்தனர். ஊவா எழுத்தாளர் ஒன்றியம் என்ற அமைப்பை நிறுவி மாதம் ஒரு கருத்தரங்கை நடத்திவருகின்றார். இவரின் மணிவிழா சிறப்பாக நடைபெற "குன்றின் குரல்" தன்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற குன்றின்குரல் எழுத்துப் பயிற்சி அரங்கில் "நெருப்புக்குள் வீடுகட்டி" என்ற தலைப்பில் எழுதப்பட்ட சிறுகதையும் கவிதையும் இங்கு இடம் பெறுகின்றன.

# நெருப்புக்குள் வீடுகட்டி

கோணமுட்டாவ

## இரா. ராஜகோபால்

நண்பனே!
மனித நேயம்
மறந்து.....
மனித இரத்தத்தால்
அபிஷேகம் செய்யப்படும்
இந்த மண்ணிலே
வீடுகட்ட வேண்டாம்!

சுதுபண்டா கூடச்
சொன்னான்!....
"துவேசம் போர்த்திய
துப்பாக்கிககள்
தலை தூக்கிய
இந்தத் தரையிலும்
வீடு கட்ட வேண்டாம்"
என்று தான்

"ஆமாம் ..... அப்துல்லா"
இன வாதம்
உடுத்திக் கொண்ட
சமுதாயத்தில்
நமது நட்பின்
சப்த நாடிகள்
அறுத்தெறியப்படலாம்

துப்பாக்கியின்
சுவாலையால்
சிறகுகள் பொசுக்கப்பட்ட
சமாதானப் புறா
சுதந்திரமாய்ப்
பறக்கும்வரை
நெருப்புக்குள் வீடுகட்டி....
வசிப்போம்!
அப்போதுதான்
நம் சினேகிதம் கூட
இங்குசிதைக்கப்படாமலிருக்கும்

இது ........
நமது தேசத்துக்கு
வந்தப் புதிய வேதனைதான்

நம் ஈழத்தின்
இனவாதத்தைப்
பாஷைகளால்... அல்ல...
நமது நட்பின்
தகனத்தால்
சுட்டெரிப்போம்!

## ஷாந்தி மோஹன்

சுள்ளென்று எரிக்கும் அந்த உச்சி வெய்யிலின் உக்கிரத்தைக்கூட அச்சாக்கடைக் கானின் துர்நாற்றம் தூக்கியெறிந்து கொண்டிருந்தது! வியர்வையை துடைத்துக்கொண்ட பெரியசாமியால் அத்துர்நாற்றத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை. சுவாச வாயிலை சுருக்கியபடியே, கான் மண்ணை வழித்துக் குவித்தப்படியே முன்னேறிச் சென்றுகொண்டிருந்தார் பெரியசாமி.

சிறிது தூரஞ் சென்றபோது, தென்பட்ட "காட்டுக் கற்பாறை" யெனக்கூறப்படும், இளைப்பாற்றுக் கல்லின் மீது பெரியசாமியின் கண்கள் குத்திட்டு நின்றன! எண்ணங்கள், அவரையுமறியாது, சிறகடித்து பறந்தன.

வழமைபோல், அன்றும் அப்படித்தான், தனது சில சகாக்களுடன் அமர்ந்து காலைத் தேநீரைக் களைப்புத்தீரப் பருகிக் கொண்டிருந்தார், பெரியசாமி கங்காணி. அவ்வேளை எதிர்பாராத விதமாக துரையும் தோட்டச்சொந்தக்கார நிறுவனத்தாருள் ஒருவரும்,பொட்டு கான் வழியாக நடந்து வந்து, கங்காணியார் அமர்ந்திருந்த, காட்டுக்கற்பாறையை அடைந்தனர், இளைப்பாறிய கங்காணியை பார்த்த தோட்டத்துத் துரை, "ஏ பெரியசாமிக் கங்காணி இங்க வாரது" என்றழைத்தார். குரல் வந்ததிக்கை நோக்கிய பெரியசாமிக்கு பகீரென்றது. என்றாலும் தேநீர் இடைவேளைதானே? எனப்பயத்தை தவிர்த்த படியே விரைவாக எழுந்து நடந்தார்.

"என்ன கங்காணி இப்பிடி உக்காந்து தேத்தண்ணி குடிச்சா தோட்டம் எப்புடி, லாபத்தில போகும்? சொல்லணும் கங்காணி!" என்ற துரைத்தனமான தமிழுக்கு பதில் சொல்ல முற்பட்ட கங்காணி, "என்னங்க சேர் இது எங்களோட தேத்தண்ணி நேரந் தானுங்களே? நாங்க ஒன்னும் வேல நேரத்தில ஒக்காந்து தேத்தண்ணி குடிக் கலைங்களே.....?" என்ற கங்காணியின் நியாயமான பதிலும் கேள்வியும்,ஏனோ, அவர்களுக்கு அநியாயமாக்கப்பட்டது.

"ரெம்பக் கதைக்க வானாங் கங்காணி,நான் சொல்லுறத செய்யுறது. இப்பப்போய் வேலய பார்த்திட்டு, அந்திக்கு, ஆபீஸ் பக்கம் வாறது" என்று கூறியபடியே தன்னுடன் வந்த தோட்ட நிறுவனத்தாருடன்ஆங்கிலத்தில் சம்பாஷித்தபடி, துரை போய்க் கொண்டிருந்தார்.

அன்று மாலை துண்டை உதறி தோளில் போட்டப்படியே நடந்த விடயங்களை பற்றி விவாதித்துக் கொண்டு, தன் சகாக்கள் இருவருடன் ஆபீஸ் நோக்கி நடந்தார், கங்காணியார். பல்வேறு பிரச்சினைகள் பற்றி சுபவைசர்களுடனும் பெரிய கணக்குப்பிள்ளையுடனும் கதைத்து கொண்டிருந்த துரையவர்கள், யன்னல் வழியாக கங்காணியாரை கண்டதும் அவரை அழைக்குமாறு கணக்குப் பிள்ளைக்கு சைகை காட்டினார்.

பெரியசாமி கங்காணி பயபக்தியுடன் யன்னலருகே செல்ல, துரையின் இறுக்கமான வதனம் சற்று விரிந்து சுருங்கியது. "என்ன கங்காணி நான் இன்னக்கி காலேல சொன்னது நெனவில இருக்கா" என்ற பிள்ளையார் சுழியுடன் ஆரம்பித்தார். தோட்டத்துரை டொான் லேனாட்ஸ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாங்க சேர். ஆனா".... என்று இழுத்த கங்காணியின் அபிப்பிராயத்தையும் செவிமடுக்கத் தவறவில்லை, துரையவர்கள்! "சொல்லுறது கங்காணி" என்ற துரையின் உற்சாகத்தை தொடர்ந்து, "வந்து சேர், இவ்வளவு நாளும் நீங்கத்தானே சேர் எங்களுக்கு துரையா இருந்தீங்க........? நாங்க இவ்வளவு நாளும் பத்து மணிக்கு தேத்தண்ணி குடிச்சது ஐயாவுக்கு நல்லா தெரியுந்தானுங்களே? அதோட சேர் மனுஷன் தொடர்ந்தும் வேலை செய்யுறதுன்னா, எடயில எதையாவது கொஞ்சம் தின்னு குடிச்சாத்தானே சரிவருங்க. அப்பதானுங்களே வேலையும் சுருக்கா, அதிகமாக நடக்கும்...? என்னங்கையா ....? நாஞ் சொல்லுறது சரிங்களா?" என்று நிறுத்தினார் கங்காணி.

தன்னையறியாது தலையையாட்டி ஆமோதித்த கணக்குபிள்ளையைக்கூட ஒரு மாதிரியாக பார்த்த துரை "சொல்லுறது வெளங்குது கங்காணி ஆனா எந்த நாளும் ஒரேமாதிரி வேல செய்ய முடியாது தெரியுமா? இப்போ முந்தி போல இல்லையே தோட்டத்தக் கம்பனிக்காரங்களுக்குக் கொடுத்தாச்சு தெரியுமா? இதப்பத்தி கணக்குபுள்ள ஐயா சொல்லியிருப்பாரே. அவங்க சொல்லுறபடிதான் நான் உங்களுக்கு வேல சொல்ல ஏலும். அதேபோல நான் சொல்லுறபடிதான் நீங்க வேல செய்ய வேணும். விளங்கிச்சா கங்காணி?" என்ற துரையவர்களின் வினாவிற்கு கங்காணியார் விரைவாகத் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

"சரி கங்காணி நாளேலயிருந்து ஒழுங்கா வேல பார்க்க வேணும். காலம்பர தேத்தண்ணிக்கு ஐஞ்சு நிமிஷத்துக்கு மேல குடுக்க வானாம். அதுக்கு மேல வந்தா நாம் பாக்கிறது. இப்ப போறது கங்காணி" என்று கதையை முடித்த துரைக்கும் பக்கத்திலிருந்த கணக்குப்பிள்ளைக்கும் "சலாம்" சொல்லிய பெரியசாமி கங்காணி படிகளை தாண்டிப் பாதையை அடைந்தார். அவரைப்பின் தொடர்ந்து ஒரு கூட்டமே அவரை சூழ்ந்துக் கொண்டது.

"என்ன கங்காணி ஐயா தொற சொன்னத நாங்களும் கேட்டுக்கிட்டுதான் இருந்தோம்.எல்லாத்துக்கும் ஆமாப் போட்டுட்டு வந்திட்டீங்க தானே?" என்று ஒருவன் தலையையாட்ட, மற்றொருவன், "ஆமா ஐம்பது வருசமாத் தலைய சாய்ச்சுக்கிட்டு வேல செஞ்சது பத்தாதுன்னு, எங்கள வேற பயந்தாங் கொள்ளியாக்கீருங்க! போங்கையா, நீங்கள்ளாம் ஒரு கங்காணி நாளைக்கு வேலக்காட்டுக்கு வாங்க பாத்துக்கர்றோம்," என்ற வார்த்தைகள் சவால்களுடன் கூட்டம் ஆங்காங்கே பிரிந்து சென்றது.

தன் ஐம்பது வருட சேவையில் இத்தோட்டத்தையே உருவாக்கிக் குழந்தைபோல் வளர்த்துத் தன் இனசனங்களையே உரமாய்ப்போட்டு இன்று கம்பீரம் இழந்து தளர்நடை நடந்து இறைவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு செல்லும் பெரியசாமி போன்றோருக்கு, உண்மையில் சோதனைக்காலந்தான் பிறந்து விட்டதோ என்னவோ?...... பாவம் அவர்தான் என்னசெய்வார், தோட்டத்துரைதான் என்ன செய்வார்?....

தூக்கம் பிடிக்காத இராப்பொழுது புலர்ந்தது. பெரட்டுக்களத்தில், வழமைக்கு மாறாத் தேனீர் குடிக்காதவன் கூட தேநீர்ப்பையுடன் வந்திருப்பதைக் கண்ட கங்காணியின் மனம் சுரீரென்றது. அர்த்தம் பொதிந்த பார்வையை வீசிய கணக்கப்பிள்ளை ஐயாவிற்கு "செலாஞ்" சொல்லியவாறே வேலைக்கு ஆயத்தமானார் கங்காணி.

அன்று தேநீர் வேளை நெருங்குவதை பயத்துடன் எதிர்ப்பார்த்து கொண்டிருந்த கங்காணி வழமைபோல் தனக்கும் வீட்டிலிருந்து தேநீர் வருவதைப்பார்த்து பெருமூச்செறிந்தார். தேநீரை வாங்கி அவசர அவசரமாக ரொட்டியை வாயில் திணித்துத் தேநீரை மடக்மடக்கென்று பருகி முடித்து வேலையைக் கவனிக்கலானார். ஆனால் வேலை செய்ய எவராவது எழும்பினாற்றானே? அனைவரும் ஆறுதலாக தேநீரை சுவைத்துப்பருகி, மெதுவாக பீடி பற்றவைத்துக் கொண்டிருந்தனர்! அதே சமயம் அங்கு வந்து தரித்து நின்ற துரையின் ஜீப் வண்டியை யாரும் கவனிக்காதது போலவே இருந்தனர். பெரியசாமி கங்காணி வேட்டியை சற்று இறக்கி விட்டுக்கொண்டார்.

ஆத்திரமடையத்தக்க ஆறுதலான இளைப்பாறல்களைக் கண்ணுற்ற துரையவர்கள் சீற்றம் கொண்டார். கங்காணியைக் கண்டபடி திட்டினார். தொழிலாளிக்கு வேலை தேவையில்லாவிடில் வீட்டுக்கு போகுமாறு கட்டளையிட்டார்.

பொங்கியெழுந்த தொழிலாளர் வர்க்கம் அந்நியர் ஆட்சியில்தான் அவர்களுக்குப் பயந்து மாடாய் உழைத்துங்கூட ஒருவித சுதந்திரமுமின்றி வாழ்ந்தனர். ஆனால் இன்று மலையக மாந்தர் நெருப்பிற்குள் வீடுகட்டுவதைப் போல் அன்னியராட்சியினின்றும் தப்பி உரிமைகளைப் பெற்றவேளை மீண்டும் அதே ஜுவாலை தெரிகிறதே! தொழிலாளர் சமூகத்திற்கு மீண்டும் ஒரு அடக்குமுறையா? இந்த தொழிலாளர் வர்க்கமென்பது கடைச்சரக்கா? அல்லது களிமண் பொம்மைகளா? அவர்களுக்கென்று தேநீர் குடிக்கக்கூட நேரமில்லையென்றால் என்ன வாழ்க்கை இது? சுதந்திரம் என்ற பெயரில் முதலாளித்துவமா? இவற்றையெல்லாம் முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். தொழிலாளர் மனங்களில் சிந்தனையோட்டங்கள் கிளையாறுகளாய்ப் பரிணமித்தன.

"நாளைக்குத் தோட்டத்தில ஸ்டிறைக் போடப்போறாங்களா, நான் என்னங்க செய்யிறது" என்ற பெரியசாமிக் கங்காணியின் வார்த்தைகளுக்கு," நீயும் ஸ்டிறைக் போடு மேன்" என்ற சீறலுடன் ஜீப்பில் ஏறி விரைந்தார் துரை. அங்கு பறந்த புழுதி கூட்டத்திலிருந்தே துரையின் கோபாவேசம் புலனானது.

மறுதினம் காலை பெரட்டுக்களம் வெறிச்சோடிக்கிடந்தது. எதிர்ப்பு ஊர்வலங்கள், தோட்டத்து முனையிலிருந்து ஆரம்பமாகின. பல்வேறு உரிமை வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகள் உயர்த்திப் பிடிக்கப்பட்டன! கோஷங்கள் எழுப்பட்டன! ஊர்வலம் முன்னேற முன்னேற சனக்கூட்டம் அதிகரித்தது. முதியோரும் குழந்தைகளும் பார்வையாளர்களானார்கள். பெரட்டுக் களத்தில் நின்றுக் கொண்டிருந்த கங்காணியும் கணக்கப்பிள்ளையும் மௌனம் சாதித்தார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் ஆபீஸை அண்மித்தபோது இடையில் பெரட்டுக்களத்தில் நின்றுகொண்டிருந்த கங்காணி பலாத்காரமாக இழுக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலத்தின் முன்னணியிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஒதுங்கிவிட நினைத்த கங்காணியால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

சமயம் பார்த்து வந்தன துரையினதும் போலீஸ் மற்றும் நிறுவன முகாமையாளரினதும் வண்டிகள்! ஊர்வல முற்பகுதியில் சுலோக அட்டையுடன் நின்ற பெரியசாமி கங்காணியை கண்ணுற்ற துரை கண்களை அகல விரித்ததும் கங்காணி தலையை தாழ்த்திக்கொண்டார். கூட்டத்தை பார்த்து துரை பேசத் தொடங்கியதும் கூட்டம் அமைதியடைந்தது.

கடந்த இரண்டு மாதங்களின் முன்பு இத்தோட்டத்தை தனியார் கம்பனி ஒன்று பொறுப்பேற்றுக் கொண்டதையும் அந்தக் கம்பனி தன் இலாப நோக்கங் கருதி மட்டுமே செயற்படுவதால், தொழிலாளர் நலனை ஓரளவிற்கே கவனிக்க முடியுமென்றும், அதனாலேயே தேநீர் இடைவேளையையுங் குறைத்துள்ளதாயும் கம்பனி சொந்தக்காரர்களின் அபிப்பிராயத்தினையே தான் இங்கு கூறுவதாகவும் அவர்கள் கூறுவதுபோலவே தான் இந்நிருவாகத்தை நடாத்தவேண்டியுள்ளதாகவும் கூறி முடித்தார் துரை.

தொழிலாளர்களின் கோஷங்கள் வானைப் பிளந்தன. ஆனால் அந்த கோஷங்களால் எந்த வித பலனுமில்லையென்பது நன்கு தெளிவாகிவிட்டது. ஆம். அதிகாரம்! அதுவும் சர்வாதிகாரம்!! தொழிலாளர் தம் கோஷத்தினூடே இந்த வேலை நிறுத்தத்தைத் தொடரப்போவதாய் அறிவித்தனர். அந்த அறிவிப்புக்கு உடனேயே பதிலடி கிடைத்தது.

ஆமாம், தம் கட்டுப்பாட்டுக்குள் வேலை செய்யவிரும்பாதவர்களுக்குப் பதிலாக கூலியாட்களை அமர்த்தப்போவதாயும் இயன்றவரை ஆட்களைக் குறைப்பதால் தோட்டத்தை இலாபத்தில் கொண்டு செல்லலாமென்றும், கூறியதோடு நின்றுவிடவில்லை. இவ்விடயத்திற்கு முன்மாதிரியாக இங்கேயே இப்போ ஓர் மாற்றத்தைக் கூறப்போவதாய் சொல்லி அந்த அறிவிப்பையும் தந்தனர். அவ்வறிவிப்பை கேட்ட ஒவ்வொருவர் தலையிலும் சம்மட்டி கொண்டு அடித்தாற் போலிருந்தது. ஆமாம்..... இவ்வளவு காலம் கம்பீரமாக கங்காணி உத்தியோகம் பார்த்த பெரியசாமி கங்காணி தன் கங்காணி வேலையை விட்டு விட்டு சாதாரண தொழிலாளியாக வேலை செய்ய வேண்டுமாம். பெரியசாமி கங்காணியின் இடத்திற்கு அவர்களின் நிறுவனப்பக்கத்திலிருந்து நாளைக் காலை ஆள் அனுப்பப்போகிறார்களாம்! இந்த கங்காணியின் பலஹீனத்தாலும் தூண்டுதலாலுமே இப்படி வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதாயும் இனிமேல் இதற்கெல்லாம் இடமில்லையென்றும் அறிவித்துவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றனர் துரைமார். ஒரு சனந்தானும் வாய் திறக்கவில்லை. துக்கத்தால் வெதும்பினர்.

''இரத்தமும் வியர்வையும் சிந்தியுழைத்து வளர்த்துவிட்ட இந்த தேயிலைச் செடிக்குத்தானும் நன்றியிருக்கமோ என்னவோ" என நினைத்தவாறே அவ்விடம் விட்டகன்றார் பெரியசாமி.

"என்ன செய்வது வயிற்றுப் பிழைப்பிற்காகவும் பிள்ளைகளை கல்விகற்கச் செய்வதற்காகவுமே இந்தத் துர்நாற்றம் பிடித்த கான்களை வழித்துக்கொண்டிருக்கின்றேன்,"..... என்று நினைத்தவர் அரசமர நிழல் ஒரு மணியைக் காட்டியதைக் கண்டு சுய நினைவு வரப்பெற்றவராய் தன்வேலையை தொடர்ந்தார்

♥♥♥

Centre for women & Development
CWD 07, RATNAM LANE,
Off K.K.S. ROAD
VANNARPANNAI,
JAFFNA — SRI LANKA.

## மலையகமக்களின் நாட்டார் வழக்காற்றியல்

மலையக கலை இலக்கியப் பேரவையும் சத்தியோதய பொதுசனத்தொடர்பு பிரிவும் இணைந்து நடத்தும் கருத்தரங்கு நவம்பர் 6,7ம் திகதிகள் சத்தியோதய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது. நாட்டார் வழக்காற்றியல் கருத்தரங்கு பேராசிரியர் காசிவதும்பி அவர்களின் ஆலோசனையுடன் ஐந்து அமர்வுகளாக நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் வாய்மொழி இலக்கியங்கள், ஆற்றுகை கலைகள், கரணங்களும் நம்பிக்கைகளும் பற்றிய ஒன்பது ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

பேராதனைப்பல்கலைகழக தமிழ்துறைத் தலைவர் திரு. எஸ். தில்லைநாதன் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.எஸ் சந்தானம் கலாநிதி மௌனகுரு, கலாநிதி எம். ஏ. நுஃமான், திருமதி லலிதாநடராஜா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக வந்து கலந்து கொள்வார்கள் மற்றும் கலாநிதி ந. வேல்முருகு திரு.சாரல்நாடன், திரு. சு. முரளிதரன், மாத்தளை வடிவேலன், திரு செ.யோகராஜா, திரு.வி.தேவராஜ் ஆகியோர் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பார்கள். இதற்கான ஏற்பாடுகளை மலையக கலை இலக்கிய பேரவையும் சத்தியோதய பொதுசன தொடர்பு பிரிவும் செய்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றின் குரல்



எனக்கு —
ஊட்டிப் பார்க்க
உனக்கு
ஆசைதான் அம்மா!

வறுமை ஈட்டி
தூக்கிய
எலும்புக் கூடான
உன் உடலில்
ஓடும் —
என்னை தீட்டிப் பார்த்த
குருதியையா
நான் —
உறிஞ்சிப் பார்ப்பது?
வேண்டாம் அம்மா!

மேமன் கவி

ஒரு தலைப்பு
இரு கவிதை

## ஒரு பிஞ்சுவின் பிரகடனம்

அம்மா! நான்
அங்கங்கள் விற்கும்
தங்கத் தீவிலே
சிரிக்கும் "டொலர்"

எத்தியோப்பியாவில்
உயிர் மட்டுமே
ஊசலாடும்
எலும்புக் குச்சி!

நாளைய
சிவகாசியின்
சின்ன இயந்திரம்!

கொழுந்து பூமியிலே
பிள்ளைக் காமராவின்
அனாதை ஆத்மா!

உன் மடிமட்டுமே
என் அடையாள
அட்டை
நீ ஊட்டும்
பால் மட்டுமே
என் உயிரின் சட்டை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org